ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஐரோப்பிய சுற்றுப் பயணம் (தொடர்-2) பக்கம் 3

ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும் (தொடர்-7) பக்கம் 8

துஆக்களை செவியேற்பவன் எனும் பண்பின் ஒளியில் இறையிருப்பு பக்கம் 13

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் படைப்பினங்கள் மீதிருந்த அனுதாபம் (தொடர்ச்சி...) பக்கம் 21

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | January 2025 | Vol. 4 - Issue No. 2

Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005

Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311

## 129th Jalsa Salana Qadian 2024



Silent Prayer after the hosting of Liwa-e-Ahmadiyyat at Jalsa Salana Qadian 2024



Glimpses from Jalsa Salana Qadian 2024



Glimpses from Jalsa Salana Qadian 2024



Guests offering Fajr Namaz at Masjid Aqsa, Jalsa Salana Qadian 2024



# திருக்குர்ஆன்

وَقَالَ رَبُّكُمُ ادْعُوْنِىْٓ اَسْتَجِبْ لَـكُمْ‌ ؕ
اِنَّ الَّذِيْنَ يَسْتَكْبِرُوْنَ عَنْ عِبَادَتِىْ
سَيَدْخُلُوْنَ جَهَنَّمَ دٰخِرِيْنَ ۚ

மேலும் உங்கள் இறைவன் கூறுகின்றான்: நீங்கள் என்னிடம் வேண்டுங்கள்; நான் உங்கள் வேண்டுதலுக்குப் பதில் அளிப்பேன். ஆனால் என்னை வணங்கும் விவகாரங்களில் ஆணவம் கொண்டிருப்பவர்கள் நிச்சயமாக இழிவடைந்தவர்களாக நரகத்தில் நுழைவார்கள். (40:61)



# ஹதீஸ்

حَدَّثَنِي عَنْ سَلْمَانَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ
صلى الله عليه وسلم " إِنَّ رَبَّكُمْ تَبَارَكَ
وَتَعَالَى حَيِيٌّ كَرِيمٌ يَسْتَحْيِي مِنْ عَبْدِهِ
إِذَا رَفَعَ يَدَيْهِ إِلَيْهِ أَنْ يَرُدَّهُمَا صِفْرًا " .

ஹஸ்ரத் ஸல்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “உங்கள் இறைவன் மிக்க அருளுக்குரியவனும் மிக உயர்வானவனுமாவான். மேலும் அவன் கண்ணியமிக்கவன். மேலும் வெட்கப்படுபவன். அவனது அடியான் இருகரமேந்தி அவனிடம் மன்றாடும் போது அவற்றை வெறுங்கையோடு திருப்பி அனுப்ப அவன் வெட்கப்படுகிறான்.” (அபூதாவூத் ஹதீஸ் எண். 1488)




# ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஐரோப்பிய சுற்றுப் பயணம்

தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்

2

### ஜெருசலேமிலிருந்து புறப்பாடு:

கவர்னர் வீட்டில் வழங்கப்பட்ட விருந்திற்குப் பிறகு ஹுஃஸூர் (ரலி) அவர்கள் நியூ கிராண்ட் ஹோட்டலுக்கு 4.00 மணி அளவில் வந்தார்கள். ளுஹர் மற்றும் அஸ்ர் தொழுகைகளுக்குப் பிறகு இரயில்வே ஸ்டேஷன் சென்றார்கள். இரயில் ஐந்து மணி அளவில் டமாஸ்கஸுக்கு ஹை.்.பா மற்றும் ஆகா வழியாக சென்றது. (அல் .்.பஸ்ல் 4 செப்டம்பர் 1924 பக்கம் 4)

ஜெருசலேமில் இருந்து பயணக் குழு அல்லூத் இரயில் நிலையத்திற்கு வந்தது. அங்கு மற்றொரு இரயிலின் மூலம் 10:30 மணி அளவில் ஹை.்.பா சென்றடைந்தது. ஹுஃஸூர் (ரலி) அவர்கள் கிராண்ட் ஹோட்டல் நாசரில் தங்கினார்கள். மறுநாள் காலை ஹுஃஸூர் (ரலி) அவர்கள் ஹை.்.பா நகரை சுற்றிப் பார்த்தார்கள். பிறகு ஹை.்.பாவிலிருந்து இரவு 8:30 மணி அளவில் டமாஸ்கஸ் வந்து சேர்ந்தார்கள். (ஸ.்.பரே ஈரோப் பக்கம் 48-52)

### டமாஸ்கஸ் செல்லுதல்:

ஹுஃஸூர் (ரலி) அவர்களும் பயணக் குழுவினரும் 4 ஆகஸ்ட் 1924 மாலையில் டமாஸ்கஸ் வந்தடைந்தார்கள். கிராண்ட் விக்டோரியா ஹோட்டலில் அவர்கள் ஓர் இரவு தங்கினார்கள். பிறகு சென்ட்ரல் ஹோட்டலுக்குச் சென்றார்கள். (ஸ.்.பரே ஈரோப் பக்கம் 53-57)




அமெரிக்க அரபி நாளிதழ் அல் குதா 29 ஆகஸ்ட் 1924-ல் ஒரு கட்டுரை மஸீஹ் அல் ஹிந்து பி திமிஷ்க் என்ற தலைப்பில் வெளியிட்டது. அதில் அஹ்மதிய்யா ஜமாஅத் குறித்து விரிவான அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. மேலும் கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அரபு நாடுகளுக்கு சென்ற விஷயத்தை குறித்தும் அதில் கூறப்பட்டிருந்தது. அந்த சுற்றுப் பயணத்தைக் குறித்து ஹுஃஸூர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "நம்முடைய பயணக் குழு சிரியாவை வந்தடைந்ததும் நாம் ஒரு பெரிய ஜமாஅத், அஹ்மதிய்யத்தின் வட்டத்திற்குள் நுழைவதற்குத் தயாராக இருப்பதைக் கண்டோம். அவர்கள் இப்பொழுதும் தயாராகவே உள்ளனர். இந்தத் திட்டத்தில் அதாவது தப்லீகில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் இன்ஷா அல்லாஹ் சிரியா நம்முடைய ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு பெரும் காரணியாக அமையும். ஏனென்றால் பழைய முன்னறிவிப்பு -களிலிருந்து மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இறைஅறிவிப்புகளில் இருந்தும் இந்த நாடு ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் ஒரு பெரும் பங்கு வகிக்க இருக்கிறது என்று தெரிகிறது. அப்தால் சிரியா - சிரியாவின் நல்லடியார்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக மன்றாடுவார்கள் என்ற இறைவனது முன்னறிவிப்பு இந்த விஷயத்தைத் தெளிவாக்குகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தி சிரியாவில் பரப்பப்படும். அந்த மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக ஜமாஅத்தில் இணைந்த பின்னர் துஆ செய்வார்கள். மேலும் அதன் காரணமாக அன்னாருடைய தூதுச்செய்தி பரவுவதற்குக் காரணமாக அமைவார்கள்." (அன்வாருல் உலூம் தொகுதி 9 பக்கம் 27-28)

டமாஸ்கஸில் தங்கி இருந்தபோது ஹுஃஸூர் (ரலி) அவர்கள் இந்தப் பயணம் ஜமாத்திற்கு பெரும் நன்மை தரக்கூடியதாக இருந்தது என்று கூறினார்கள். மேலும் அவர்கள், ஜமாஅத், சிரியாவில் பல எதிர்ப்புகளை சந்திக்கும். எனினும் மகிமைக் -குரிய வெற்றி ஒன்று காத்திருப்பதாகவும் கூறினார்கள். (ஸ.்.பரே ஈரோப் பக்கம் 65)

5 ஆகஸ்ட் 1924-ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஷேக் ய.்.கூப் அலி இர்.்.பானி (ரலி), ஹஸ்ரத் ஹா.்.பிஸ் ரோஷன் அலி (ரலி) மற்றும் சவுத்ரி .்.பத்ஹ் முஹம்மத் சியால் (ரலி) ஆகியோரை உள்ளூரில் உள்ள அறிஞர் பெருமக்களையும் பிரமுகர்களையும் சந்திக்குமாறு வழிகாட்டினார்கள். இந்த மூவரும் பல்வேறு பிரமுகர்களையும் அறிஞர்களையும் சந்தித்தார்கள். இதன் விளைவாக அல் குதா என்ற பத்திரிகை மிகவும் நீண்ட ஒரு கட்டுரையை 11 செப்டம்பர் 1924-ல் வெளியிட்டது. அதில் அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் குறித்து அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

### டமாஸ்கஸ் மக்களுக்கு தூதுச்செய்தி:

ஹுஃஸூர் (ரலி) அவர்கள் டமாஸ்கஸில் இருந்த பொழுது டமாஸ்கஸின் மக்களுக்காக ஒரு தூதுச் செய்தியை அல் நிதா என்ற பெயரில் வெளியிட்டார்கள். இந்த தூதுச் செய்தி மொழியாக்கம் செய்யப்பட்டு அத்துடன் ஒரு பைஅத்

படிவமும் வைக்கப்பட்டிருந்தது. துரதிஷ்டவசமாக அந்த தூதுச் செய்தி பத்திரிகையில் பிரசுரமாகவில்லை. ஏனென்றால் வெளியீட்டுத் துறையின் தலைவராக ஒரு மு.்.ப்தி இருந்தார். அவர் அந்தக் கட்டுரையில் இஸ்லாத்துக்கு எதிரான சில கொள்கைகள் இருப்பதாகக் கூறி அது வெளியாவதைத் தடுத்து விட்டார். ஹுஸுர் (ரலி) அவர்கள் தம் தோழர்களை டமாஸ்கஸின் கவர்னரைச் சந்திக்குமாறு அறிவுறுத்தினார்கள். மேலும் சிரியா ஃபெடரேஷனுடைய தலைவரை சந்திக்குமாறும் கூறினார்கள். இருப்பினும் மு.்.ப்தி இந்த பிரசுரத்தை ஏற்கனவே மறுத்து விட்ட காரணத்தினால் அவர்களால் இவ்விஷயத்தில் எதுவும் செய்ய முடியவில்லை. பின்னர் ஒரு வெளியீட்டாளர் முன் வந்து அதனை வெளியிட்டார். ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்ன -வென்றால் அந்த வெளியிடப்பட்ட பிரதி காவல்துறையினால் கைப்பற்றப்பட்டது (ஸ.்.பரே ஈரோப் பக்கம் 57 முதல் 92)

ரிவியூ ஆ.்.ப் ரிலிஜியன்ஸ் அறிக்கை வெளியிட்டது. “டமாஸ்கஸில் உள்ள சில முன்னணி பத்திரிகைகளில் இருந்தும் பாக்தாத் மற்றும் கெய்ரோ ஆகிய நகரங்களில் இருந்தும் நமக்கு பிரதிகள் வந்துள்ளன. அவற்றிலிருந்து கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் டமாஸ்கஸ் விஜயம் அந்த நகரிலும் சிரியாவில் உள்ள மற்ற நகரங்களிலும் ஒரு பெரிய பரபரப்பை உருவாக்கி இருப்பதை அறிய முடிகிறது. மேலும் ஹுஸுர் (ரலி) அவர்களின் இந்த விஜயம் குறித்து இந்த பத்திரிகைகள் நீண்ட கட்டுரைகளையும் செய்தி -களையும் வெளியிட்டு இருந்தன.” (ரிவியூ ஆ.்.ப் ரிலிஜியன்ஸ் தொகுதி 23 செப்டம்பர் 1924 பக்கம் 331-332)

### வெள்ளை மினாரா:

ஆகஸ்ட் 6-ஆம் தேதி ஃபஜ்ர் தொழுகை வேளை. அல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு ஹதீஸில் கூறப்பட்டுள்ள வெள்ளை மினாரா குறித்து வழிகாட்டல் வழங்கினான். இது குறித்து ஹுஸுர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். “வெள்ளை மினாரா பற்றிய விஷயம் ஒரு புதுமை -யாகும். நான் ஹஸ்ரத் சய்யித் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் (ரலி) அவர்களின் ஒரு தோழரான மவ்லவி அப்துல் காதிர் அவரிடம் ஈஸா (அலை) அவர்கள் இறங்குகின்ற அந்த மினாராவின் இடம் குறித்து விசாரித்தேன். அதற்கு அவர் அது உமையா பள்ளிவாசலில் உள்ளது என்று கூறினார். பின்னர் மற்றோர் ஆலிம் அது கிறிஸ்தவப் பகுதிக்கு அருகில் உள்ளது என்றும் மற்றோர் ஆலிம் அந்த மினாராவை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களே தம்முடைய வருகையின் போது கட்டுவார்கள் என்றும் கூறினார்கள். இந்த மினாராவின் புதிரைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தோம். நாம் இப்போது ஒரு பார்வை பார்ப்போம். அந்த ஹோட்டலில் நான் காலை வேளை தொழுகையை நடத்திக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் நானும் ஸுல்.்.பிகார் அலி கான் சாஹிபும் டாக்டர் ரஹ்மத்துல்லாஹ் சாஹிபும் இருந்தோம். மற்றொரு வார்த்தைகளில் கூறுவதாயின் இரண்டு தொழுகையாளிகள் எனக்கு பின்னால் தொழுகையின் போது இருந்தனர். தொழுகை முடிந்ததும் நான் ஸலாம் கூறியதும் ஒரு மினாரா என் முன்னால் இருப்பதைப் பார்த்தேன். ஒரே ஒரு சாலை மட்டுமே எங்களைப் பிரித்தது. நான் இதுவே அந்த மினாராவாகும் என்று கூறினேன். நாங்கள் கிழக்குப் பக்கத்தில் இருந்தோம். அது மட்டுமே அங்கு வெள்ளை மினாராவாக இருந்தது. அது தவிர வேறு எந்த மினாராவும் வெள்ளையாக இருக்கவில்லை. உமையா பள்ளிவாசலின் மினாரா நீல நிறமாக இருந்தது. நான் அந்த வெள்ளை மினாராவைப் பார்த்தபோது எனக்கு பின்னால் இரண்டு தொழுகையாளிகளே இருந்ததும், நான் கூறினேன் அந்த ஹதீஸ் நிறைவேறி விட்டது.” (அல் ஃபஸ்ல் 4 டிசம்பர் 1924 பக்கம் 6-7)




### பல்வேறு சந்திப்புகள்:

அதே நாளில் ஹஸ்ரத் ஷேக் அப்துல் காதிர் ஜீலானி (ரஹி) அவர்களின் ஓர் வழித் தோன்றலான சில அரசு அதிகாரிகளும், டமாஸ்கஸைச் சேர்ந்த ஒரு கருவூலத் துறையின் அதிகாரியும் ஹுஸுர் (ரலி) அவர்களை சென்ட்ரல் ஹோட்டலில் சந்தித்தனர். மவ்லவி அப்துல் காதிர் அல் மக்ரிபி என்பவர் இஸ்லாமிய கவுன்சிலின் தலைவராக இருந்தார். அவரும் இரண்டு சந்திப்புகளை ஹுஸுர் (ரலி) அவர்களுடன் நிகழ்த்தினார். அடுத்த நாள் டமாஸ்கஸின் கவர்னர் ஹக்கி அல் அஸ்ம் ஹுஸுர் (ரலி) அவர்களை சந்தித்தார். அதன் பின்னர் பிரிட்டிஷ் கவுன்சில் ஒரு சந்திப்பை நிகழ்த்தியது. (ஸ.்.பரே ஈரோப் பக்கம் 56-57 மற்றும் 75-76)

ஓர் அரபிக் கவிஞர் ஹஸ்ரத் கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் அரசியல் குறித்து கேள்விகள் கேட்டார். ஹுஸுர் (ரலி) அவர்கள் அதற்கு பதில் தந்தார்கள். அந்த கவிஞர் வாக்களிக்கப் -பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில இறையறிவிப்புகளைப் பதிவு செய்து கொண்டார். பிறகு சில அரபி இறை அறிவிப்புகள் குறித்து ஆட்சேபனை செய்தார். சிலர் ஹுஸுர் (ரலி) அவர்களிடம் நீங்கள் இறையறிவிப்பைப் பெறுகின்றீர்களா என்று கேட்டபொழுது ஹுஸுர் (ரலி) அவர்கள் ஆம் என்று கூறினார்கள். ஆனால், தாம் ஒரு நபி அல்ல என்பதைத் தெளிவாக்கினார்கள். மேலும் ஹுஸுர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு நபி ஆவார்கள் என்றும் அன்னாருக்கு இறங்கிய இறையறிவிப்புகள் நற்செய்திகளின் வகையைச் சார்ந்தவை என்றும் ஹுஸுர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (ஸ.்.பரே ஈரோப் பக்கம் 66-67)

ஆகஸ்ட் 8-ல் பிரிட்டிஷ் கவுன்சில் ஹுஸூர் (ரலி) அவர்களுடன் ஒரு சந்திப்பை நிகழ்த்தியது. அது 30 நிமிடங்கள் நீடித்தது. சிரியா ஃபெடரேஷனின் தலைவர் சுபை பரக்காத்து அல்காலிதி ஆவார். அவரும் ஹுஸூர் (ரலி) அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்றார். அப்போது ஹுஸூர் (ரலி) அவர்கள் சிரியாவுக்கு பிரச்சாரகர்களை அனுப்பும் தமது எண்ணத்தை வெளிப்படுத்தினார்கள். பிறகு கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் சில பிரெஞ்சு உயர் அதிகாரிகளின் சந்திப்பும் நிகழ்ந்தது. அடுத்த நாள் மிகவும் பிரபலமான ஆலிம்கள் ஹுஸூர் (ரலி) அவர்களைச் சந்தித்தார்கள் (ஸஃபரே ஈரோப் பக்கம் 71-81)

அதே ஹோட்டலில் தங்கி இருந்த ஒரு அரபி நாளிதழின் ஆசிரியர் ஹுஸூர் (ரலி) அவர்களைச் சந்தித்தார். அஹ்மதிய்யா கொள்கைகளைக் குறித்து பல்வேறு கேள்விகளைக் கேட்டார். பிறகு பல்வேறு பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் நிறுவனர்கள் ஹுஸூர் (ரலி) அவர்களை நேர்காணல் செய்தனர். ஓர் ஆசிரியர் ஹுஸூர் (ரலி) அவர்களுடன் நிறைய புகைப்படங்கள் எடுத்துக் கொண்டார். அவர் ஹுஸூர் (ரலி) அவர்களோடு அஹ்மதிய்யா கொள்கைகளைக் குறித்து உரையாடினார். அவரிடம் தம்முடைய டமாஸ்கஸ் வருகையின் நோக்கத்தைக் குறித்து கூறினார்கள்." (ஸஃபரே ஈரோப் பக்கம் 69-80 மற்றும் 89-93)

### உமையா பள்ளிவாசலுக்கு விஜயம்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் உமையா பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார்கள். ஹோட்டலுக்கு அருகிலிருந்த பள்ளிவாசலின் வெள்ளை மினாராவை உமையா பள்ளிவாசலிலிருந்தும் காண முடிந்தது. ஹுஸூர் (ரலி) அவர்கள் அங்கிருந்து அதனைப் புகைப்படம் எடுக்குமாறு கூறினார்கள். பின்னர் பயணக் குழுவுடன் குழு புகைப்படமும் எடுக்கப்பட்டது. பள்ளிவாசலின் காத்திப் தனது ஜுமுஆ உரையின்போது ஹுஸூர் (ரலி) அவர்களையும் பயணக் குழுவையும் பற்றிக் குறிப்பிட்டுக் கடுமையாக விமர்சித்தார். அவரது அந்த உரை தூதுச் செய்தி பரவுவதற்கும் காரணமாக அமைந்தது. அந்த உரையைக் கேட்ட இரண்டு ஈரானியர் உட்பட பலர் ஹுஸூர் (ரலி) அவர்களைச் சந்திக்க ஹோட்டல் வந்தனர். (ஸஃபரே ஈரோப் பக்கம் 74-77)

### டமாஸ்கஸிலிருந்து புறப்படுதல்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மற்றும் அவர்களது பயணக் குழு டமாஸ்கஸிலிருந்து 10 ஆகஸ்ட் அன்று புறப்பட்டு சென்றது. ஹுஸூர் (ரலி) அவர்களை சுமார் 200 பேர் இரயில்வே ஸ்டேஷன் வரைக்கும் வந்து வழி அனுப்பினர். (ரிவியூ ஆஃப் ரிலீஜியன்ஸ் தொகுதி 23 செப்டம்பர் 1924 பக்கம் 331-332) இரயில் பயணத்தின் போது ஒரு நாளிதழின் ஆசிரியர் ஹுஸூர் (ரலி) அவர்களுடன் வந்து கொண்டிருந்தார். அவருக்கு ஹுஸூர் (ரலி) அவர்கள் தப்லீக் செய்தார்கள். பிரிட்டிஷ் கவுன்சில் ஒரு சிறப்பு போலீஸ் அதிகாரியை ஹுஸூர் (ரலி) அவர்களுடன் பெய்ரூட் வரை வருவதற்கு நியமித்திருந்தது. பல இரயில் நிலையங்களில் மக்கள் ஹுஸூர் (ரலி) அவர்களைப் பார்ப்பதற்காக இரயிலைச் சுற்றி கூடினர். இரயில் பெய்ரூட்டை மாலை 4:45 மணி அளவில் வந்தடைந்தது." (ஸஃபரே ஈரோப் பக்கம் 93-98)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் அவர்களின் பயணக் குழுவினரும் பெய்ரூட் மற்றும் எல் காந்தாரா வழியாக 12 ஆகஸ்ட் 1924-ல் போர்ட் செய்த் வந்தடைந்தனர். அங்கு அவர்கள் ஹோட்டல் கான்டினென்டில் தங்கியிருந்தார்கள். பிறகு எஸ்.எஸ். பில்ஸ்னா என்ற கப்பலின் மூலம் 13 ஆகஸ்டில் அவர்கள் இத்தாலியை நோக்கி பயணமாயினர். (ஸஃபரே ஈரோப் பக்கம் 110-112)

### ஐரோப்பிய மண்ணில் அடியெடுத்து வைத்தல்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் அவர்களின் பயணக் குழுவும் மத்திய கிழக்குப் பகுதியில் தமது பயணத்தை வெற்றிகரமாக முடித்த பின்பு எஸ்.எஸ். பில்ஸ்னா கப்பலின் மூலம் இத்தாலியை நோக்கி புறப்பட்டனர்.




16 ஆகஸ்ட் 1924-ல் ஹுஸூர் (ரலி) அவர்கள் பிரின்டிஸி என்ற இத்தாலிய துறைமுக நகரத்தை அடைந்தார்கள். கப்பல் இன்னும் அதன் கரைக்குச் சென்று அதை முகாமிட முயற்சி நடந்து கொண்டிருக்கும் பொழுதே ஹுஸூர் (ரலி) அவர்கள் தமது பயண குழு அனைவரையும் அழைத்துக் கொண்டு கப்பலின் மேல் தளத்திற்குச் சென்றார்கள். அங்கு பயணக் குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஹுஸூர் (ரலி) அவர்கள் மிக நீண்ட நீளமான கூட்டுத் துஆவை செய்தார்கள். ஐரோப்பிய மண்ணில் இறங்குவதற்கு முன்பு நடைபெற்ற இந்தக் காட்சி இஸ்லாத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கப்பலின் ஊழியர்களும் பிற பயணிகளும் சுற்றி நின்றவாறு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க காட்சியினை ஆச்சரியத்துடனும் வியப்புடனும் கண்டுகளித்தனர். பயணக் குழு கப்பலில் இருந்து இறங்கியபோது பல மக்கள் ஃபோட்டா எடுத்துக் கொண்டனர். குறிப்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களை ஃபோட்டோ எடுத்தனர். பின்னர் ஹுஸூர் (ரலி) அவர்களும் அவர்களது குழுவினரும் கிராண்ட் ஹோட்டல் இன்டர்நேஷனில் தங்கினார்கள். பிரின்டிஸி நகரத்திலிருந்து பயணக் குழுவினர் ஒரு விரைவு இரயில் மூலமாக ரோமுக்குச் சென்றனர். அவர்கள் ரோம் நகரை 17 ஆகஸ்ட் 1924-ல் வந்தடைந்தனர்.

### ரோம் வந்தடைதல்:

அன்று மாலை ஹுஸூர் (ரலி) அவர்கள் குகைவாசிகள் தங்கி இருந்த குகைகளுக்கு விஜயம் செய்தார்கள். ஹுஸூர் (ரலி) அவர்கள் அதைப் பற்றி இவ்வாறு எழுதுகிறார்கள். "இந்தக் குகைகள் 3 மட்டங்களாக கட்டப்பட்டிருந்தன. நான் அவற்றை என்னுடைய கண்களால்

பார்த்தேன். இங்கிலாந்துக்குச் செல்லும் வழியில் 1924-ல் ரோமில் வைத்து நான் இவற்றைக் கண்டேன். அந்தக் குகைகளில் முதல் மட்டத்தில் பல அறைகள் இருந்தன. அவற்றை எந்தக் கடினமும் இன்றி ஒருவரால் பார்க்க முடியும். ஆனால் இரண்டாம் மட்டத்திற்குச் செல்லும் பொழுது ஒருவருக்கு மூச்சு விடுவதில் கஷ்டம் ஏற்படுவதைப் பார்க்கலாம். பிறகு மூன்றாவது மட்டத்திற்குச் செல்லும் பொழுது அவரால் கிட்டத்தட்ட மூச்சு விட முடியாமல் ஆகி விடுகின்றது. அதுதான் மிகவும் கீழ்த்தளத்தில் உள்ளதாகும். இருளும் ஈரப்பதமும் அங்கு இருக்கின்றது. கிறிஸ்தவர்கள் அவற்றை ஒரு வலை பின்னல் போல் தமது தேவைக்கு ஏற்றார் போல் உருவாக்கி இருந்தனர் என்பதை நான் கண்டேன்." (த∴ப்ஸீரே கபீர் 2023 பதிப்பு தொகுதி 6 பக்கம் 485)



மூன்று பிரெஞ்சு நாளிதழ்கள் - பாரிஸ் மிடி 26 ஆகஸ்ட் 1924-லிலும், லிசியர்க்லி மற்றும் அக் ஷன் 27 ஆகஸ்ட் 1924-லிலும் ஒரு கட்டுரை "தி ரிவைவல் ஆப் இஸ்லாம்" என்ற தலைப்பில் வெளியிட்டன. அந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் குறித்தும் அன்னாரது வாதங்களைக் குறித்தும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. அந்தக் கட்டுரையில் முடிவில் இவ்வாறு கூறப்பட்டிருந்தது. "அவர் நேராக ரோம் நகருக்கு மற்ற போப்பின் அதாவது போப்பையஸ் XI அவர்களுடன் மார்க்க ரீதியிலான உரையாடல் நிகழ்த்துவதற்காக வந்தார். இந்த உரையாடல் புனித தந்தையுடன் புனித மஹ்மூத் (ரலி) அவர்கள் செய்வதாக இருந்தது. அஹ்மதிய்யத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்திருக்கும் அந்த நிகழ்வை நாம் புறக்கணிக்க முடியாது. துரதிஷ்டவசமாக வாட்டிகனில் உள்ள அலுவலகம் புனித வருடத்திற்கான ஆயத்தங்-களுக்காக கட்டிடக் கலைஞர்கள் போப்பின் குடியிருப்புப் பகுதியை இன்னும் முழுமையாக சரி செய்யவில்லை என்ற காரணத்தைக் கூறி மஹ்மூத் (ரலி) அவர்களைப் போன்ற ஒரு கண்ணியமிக்க விருந்தினரை வரவேற்க முடியாது என்று மறுத்து விட்டது. இது ஒரு வெட்கக்கேடாகும்."

### முசோலினியுடன் சந்திப்பு:

இஸ்லாத்தின் தூதுச் செய்தியை அன்றைய இத்தாலிய பிரதமர் பெனிடோ முசோலினிக்குத் தெரிவிப்பதற்காக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அவருடன் 19 ஆகஸ்ட் 1924-ல் ஒரு சந்திப்பை நிகழ்த்தினார்கள். (அல்∴பஸ்ல், 23 செப்டம்பர் 1924 பக்கம் 4)

### லாடிரி பியூனாவுக்கு நேர்காணல்:

18 ஆகஸ்ட் 1924-ல் ஹஸ்ரத் சவுத்ரி ∴பத்ஹே முஹம்மது சியால் (ரலி), ஹஸ்ரத் மவ்லானா அப்துர் ரஹீம் தர்த் (ரலி), ஹஸ்ரத் ஷேக் ய∴கூப் அலி இர்∴பானி (ரலி) ஆகியோர் ஒரு பிரபலமான இத்தாலிய நாளிதழான லாடிரி பியூனாவின் ஆசிரியரைச் சந்தித்தார்கள். அந்த ஆசிரியர் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களை நேர்காணல் செய்வதற்காக தனது விருப்பத்தை வெளியிட்டார். அதன் பின்னர் அந்த நேர்காணல் 19 ஆகஸ்டில் நடந்தது. அதில் அவர்கள் பல்வேறு மார்க்க மற்றும் சமுதாய, அரசியல் விஷயங்களைப் பேசினார்கள். நேர்காணல் முடிவுற்ற பின்னர் அந்த பத்திரிகை ஒரு நீண்ட கட்டுரையை 20 ஆகஸ்டில் பிரசுரித்தது. அதில் ஹுஸுர் (ரலி) அவர்களுடன் அவர்களின் போட்டோவும் பயணக் குழுவினின் போட்டோவும் "The Muslim Pope and his dignitaries in Rome" என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. லாடிரி பியூனாவின் போட்டோகிராபர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களை ஒரு போட்டோ எடுத்தார். அதன் இரண்டு பிரதிகளை ஹுஸுர் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்து மேலும் பல போட்டோக்கள் எடுப்பதற்காக 20 ஆகஸ்டில் விண்ணப்பம் செய்திருந்தார். ஹுஸுர் (ரலி) அவர்கள் அதனைக் கனிவுடன் ஏற்றுக் கொண்டார்கள். அதற்குப் பதிலாக ஹுஸுர் (ரலி) அவர்கள் ஒரு கடிதத்தை அவருக்கு நன்றி அறிதலாக எழுதினார்கள். மேலும் அவர்கள் ∴போட்டோவின் இன்னும் 10 பிரதிகளுக்கான ஆர்டர் அனுப்பி அவற்றைக் காதியானுக்கு அனுப்பினார்கள். (ஸ∴பரே ஈரோப் பக்கம்158)

இத்தாலியில் ஹுஸுர் (ரலி) அவர்கள் இருந்த அந்த காலத்தைக் குறித்துக் கூறும் பொழுது கூறுகின்றார்கள்: "நாங்கள் இத்தாலியில் மூன்று நாட்கள் இருந்தோம். தம் சகோதரர்கள் இத்தாலியில் உள்ள மிகப்பெரிய நாளிதழின் ஆசிரியரைச் சந்திக்கச் சென்றனர். அந்த நாளிதழ் 0.8 மில்லியன் பிரதிகளைப் பிரசுரிக்கின்றது. மேலும் அது 10 வெவ்வேறு நகரங்களில் பிரசுரிக்கப்படுகிறது. அவர் என்னை சந்திப்பதற்கான வாய்ப்பினை கேட்டார் அது எந்த நேரமாக இருந்தாலும் சரி, இரவாக இருந்தாலும் சரி என்று கூறியிருந்தார். அந்த அடிப்படையில் அவர் இரவு 11.00 மணி அளவில் ஏற்கனவே குறித்த படி வந்தார். உரையாடல் நள்ளிரவு 12.00 மணி வரை நடந்தது. பிறகு ஒரு ஆற்றல் மிகுந்த கட்டுரையை அவர் மறுநாள் காலை இதழில் பிரசுரித்தார். இத்தாலியில் இருந்த போது நான் போப் ஆண்டவரை சந்திக்க விரும்பினேன். ஆனால் அவரது ஆங்கிலேய செயலரைச் சந்தித்து இது குறித்து கேட்டபோது இந்த நாட்களில் போப்பின் இருப்பிடத்தில் எந்த ஒரு சந்திப்புகளும் நடைபெறுவதில்லை என்று கூறிவிட்டார். அந்த நாளிதழின் ஆசிரியர் என்னிடம் நீங்கள் போப்பை சந்திப்பீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் போப்பினுடைய அந்த பதிலை கூறிய போது, "நீங்கள் ஏன் போப் ஆண்டவரை சந்திக்க விரும்புகின்றீர்கள்" என்று அவர் கேட்டார். அதற்கு, "போப் ஒரு மரியாதைக்குரிய மனிதராவார். அவருக்கு ஒரு வெகுமதியை மரியாதை நிமித்தமாக வழங்க வேண்டும் என்று நான் விரும்பினேன்" என்று நான் கூறினேன். எந்த வகையான பரிசை அவருக்குத் தரப் போகின்றீர்கள் என்று அவர் கேட்டார்.

அதற்கு நான் கூறினேன் "எங்களது பார்வையில் இஸ்லாம் தான் மிகச் சிறந்த பரிசாகும். நான் அதனை அவருக்கு வழங்கி இருப்பேன்" என்று கூறினேன். அவர் இந்த விஷயத்தைத் தன்னுடைய கட்டுரையிலும் எழுதி விட்டார்." (அல் ஃபஸ்ல் 4 டிசம்பர் 1924 பக்கம் 5)

### ரோமிலிருந்து புறப்பாடு:

ஹுஸூர் (ரலி) அவர்கள் 20 ஆகஸ்ட் 1924-ல் ரோமில் இருந்து புறப்பட்டுச் சென்றார்கள். அந்தக் கப்பலில் ரோமில் இருந்து இலண்டன் செல்லும் அந்தப் பயணத்தின் போது பல அமெரிக்க சுற்றுலா பயணிகள் இருந்தனர். ஹுஸூர் (ரலி) அவர்கள் அவர்களுக்குத் தப்லீக் செய்தவாறு அந்தப் பயணம் கழிந்தது. (அல் ஃபஸ்ல் 23 செப்டம்பர் 1924 பக்கம் 5)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் அவர்களின் பயணக் குழுவினரும் பாரிஸ் மற்றும் டோவர் வழியாக 22 ஆகஸ்ட் மாலையில் இலண்டன் வந்து சேர்ந்தார்கள். (ஸ.ஃபரே ஈரோப் பக்கம்138)

### காதியானுக்குத் திரும்பி வரும் வழியிலும் இத்தாலிக்கு விஜயம் செய்தல்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் அவர்களின் பயணக் குழுவினரும் காதியானுக்குத் திரும்பி வருகையில் இத்தாலிக்கு மீண்டும் ஒருமுறை வந்தார்கள்.. அவர்கள் பாரிஸில் இருந்து மிலன் வந்தடைந்தார்கள். ஸ்டேஸியானோ டிமிலனோ சென்ரலேக்கு வந்ததைக் குறித்து ஹஸ்ரத் பாய் அப்துர் ரஹ்மான் காதியானி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "மற்ற பயணிகள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களையும் அவர்களது பயணக் குழுவினரையும் ஜன்னல்கள் வழியாக மிகவும் மதிப்பச்சத்துடனும் வியப்புடனும் அந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கேள்விகள் கேட்க விரும்பினர் என்பது தெளிவாக தெரிந்தது. ஆனால் மொழி தடையாக இருந்தது. பின்னர் எப்படியோ ஒரு சில ஆங்கிலப் பயணிகள் மொழிபெயர்ப்பாளர்களாக செயல்பட்டனர். மேலும் அந்த பயணிகளின் உணர்வுகளைப் பயணக் குழுவிற்கு எடுத்துக் கூறி அவர்களின் பதில்களையும் பெற்றுத் தந்தனர்." (ஸ.ஃபரே ஈரோப் பக்கம் 418-419)

### கரெய்யர் டலாஸீரா இதழுக்கு நேர்காணல்

ஸ்டேஸியானோ டிமிலனோ சென்ரலேயில் இருந்த பொழுது பிரசித்தி பெற்ற ஒரு பத்திரிகை கரெய்யர் டலாஸீரா ஆசிரியர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களை நேர்காணல் செய்தார். ஓர் ஆங்கில வணிகர் மொழிபெயர்ப்-பாளராக செயல்பட்டார். அந்த பத்திரிகை பின்னர் ஒரு கட்டுரை வெளியிட்டது. அதன் தலைப்பு "The 'pontiff' of the reformist Muslims passing through Milan" என்பதாகும். குறிப்பிடத்தக்க விஷயம் என்னவெனில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கிஷ்தி நூஹ் என்ற நூலில் கரெய்யர் டலாஸீராவில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கட்டுரையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். அந்தக் கட்டுரையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சீடர் பேதுருவின் ஒரு கடிதம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவை மரணத்திலிருந்து தப்பிய விஷயம் தெரிய வருகிறது." (நூஹ் நபியின் கப்பல் பக்கம் 129-130)

(தொடரும்...)

## ஒரு விதவைப் பெண்ணின் ஈமான்!

கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு நாடான தன்ஸானியாவில் வசித்து வருகின்ற ஒரு விதவைப் பெண்ணின் நல்லுதாரணத்தை எடுத்து வைக்கின்றேன். அவர்கள் தொடர்பாக அங்குள்ள அமீர் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: "அரிங்கா டவுணில் முஅல்லிம் அவர்கள் ஒரு விதவைப் பெண்ணான அமீனா சாஹிபா அவர்களிடம் **வக்ஃபே ஜதீது சந்தா**வை வசூல் செய்வதற்காகச் சென்றார். அப்போது அந்தப் பெண் மிகவும் துக்கம் நிறைந்த உள்ளத்துடன் இப்போது என்னிடம் கொடுப்பதற்கு எதுவுமே இல்லை என்று கூறினார். ஆனால், எங்கிருந்தாவது தொகை கிடைக்கும் போது நானே அதைக் கொண்டு வந்து உங்களிடம் தருவேன் என்று அவர் கூறினார். முஅல்லிம் சாஹிப் அவர்கள் தமது வீட்டைச் சென்றடைவதற்கு முன்ன –தாகவே அந்தப் பெண் 10,000 ஷிலிங்கை எடுத்துக் கொண்டு முஅல்லிம் சாஹிபிடம் வந்து இந்த தொகை ஓரிடத்திலிருந்து எனக்கு வந்தது. எனவே, முதலில் நாம் சந்தாவை செலுத்தி விடுவோம். நமக்கு செலவுக்கு தேவைப்படுவதைப் பிறகு பார்த்து கொள்ளலாம் என்று நான் எண்ணினேன். நான் 25,000 ஷிலிங் இதற்காக வாக்குறுதி அளித்திருந்தேன். எனவே, மீதமுள்ள 15,000 ஷிலிங்கையும் எங்கிருந்தாவது எனக்கு தொகை கிடைக்கும்போது நான் கொண்டு வந்து கொடுத்து விடுவேன் என்று அவர் கூறினார். 10 நிமிடங்கள் கழிந்த பிறகு மீண்டும் அவர் தொகையை எடுத்துக் கொண்டு அங்கு வந்தார். பிறகு அவர் கூறினார்: அல்லாஹ் என்னுடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதை பாருங்கள். நான் அவனது வழியில் 10,000 ஷிலிங் கொடுத்து விட்டுச் சென்றேன். நான் வீட்டிற்கு வந்து சேர்ந்ததுதான் தாமதம். அல்லாஹ் எனக்கு 35,000 ஷிலிங்கை அனுப்பித் தந்து விட்டான். அதிலிருந்து 15,000 ஷிலிங்கை சந்தாவாக செலுத்திய பிறகும் கூட என்னிடம் 20,000 ஷிலிங் எஞ்சியிருக்கின்றது என்று அவர் கூறினார். இது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் கொடையும், சந்தா செலுத்தியதன் அருளும் ஆகும் என்று அவர் கூறினார். இவ்வாறு அவரது ஈமான் அதிகரித்தது."

**(ஜுமுஆ குத்பா 06.01.2017)**

# ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும்




## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

*தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.*

7

இப்போது பாருங்கள். இந்த எல்லாக் கூற்றுகளும் வானியலின் அறிவுக்கு மாறுபட்டவையா இல்லையா? அவ்வாறே வானியலின் அடிப்படையில் சுவிசேஷத்தின் மீது இன்னோர் ஆட்சேபனை இருக்கிறது. அது என்னவெனில், மத்தேயு சுவிசேஷத்தில் பாருங்கள். (நட்சத்திர வணங்கிகளாகிய) அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது. (மத்தேயு 2:9 காண்க).

வானியலின்படி, நட்சத்திர வணங்கிகளின் காலடியை ஒட்டி அவர்களுடன் சென்ற அந்த வியப்பிற்குரிய நட்சத்திரத்தின் பெயர் என்ன? மேலும் இது எவ்விதமான அசைவாகவும், எந்த விதிமுறைகளின்படி ஒப்புக் கொள்ளப்படும் சான்றாகவும் இருக்கிறது? என்பதை இப்போது கிறித்தவ அன்பர்கள் தயவு செய்து கூறுங்கள். மத்தேயு சுவிசேஷம் இப்படிப்பட்ட நட்சத்திரத்தைப் பற்றி வானியல் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து தன்னை எவ்வாறு விடுவித்துக் கொள்ள முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. சிலர் நெருக்கடிக்குள்ளாகி, இது மஸீஹின் கூற்று அல்ல. மாறாக, மத்தேயுவின் கூற்று ஆகும். மத்தேயுவின் கூற்றை இல்ஹாமிய கூற்று என்று நாங்கள் நம்புவதில்லை என்று விடை அளிக்கின்றனர். இது என்னே நல்ல விடை!

(கிறித்தவர்கள் இதற்கு என்ன அருமையான விடையைக் கூறுகிறார்கள் பாருங்கள் என்று இதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வஞ்சப்புகழ்ச்சி அணியாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் - மொழிபெயர்ப்பாளர்).

(மத்தேயுவின் கூற்றை இல்ஹாமிய கூற்று என்று நாங்கள் நம்புவதில்லை என்ற பாதிரிகளின் விடையாகிய) இதன் மூலமாக சுவிசேஷம் இல்ஹாமைக் கொண்டது என்பதன் சாயம் நன்றாக வெளுத்து விட்டது. (அதாவது சுவிசேஷம் இல்ஹாமைக் கொண்டது அல்ல என்பது தெளிவாகி விட்டது - மொழிபெயர்ப்பாளர்). மேலும் (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:) நான் இறங்கி வந்து இவ்வாறு கூறுகிறேன்: இது மஸீஹின் கூற்று அல்ல. மத்தேயு அல்லது வேறு யாரோ ஒருவருடைய கூற்று ஆகும். (சரி விடுங்கள்). (எது இல்ஹாமிய கூற்று என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதோ, எது நமது சார்பாக ஆட்சேபனைக்கு உட்பட்டு விட்டதோ) அதைப் போன்றதே மஸீஹின் கூற்றும் ஆகும். கொஞ்சம் அதையே வானியல் கோட்பாட்டிற்கு ஏற்றதாக ஆக்கிக் காட்டுங்கள். இந்தக் கூற்று இல்ஹாமைச் சேர்ந்தது அல்ல. மாறாக, மனிதனின் சார்பாக சுவிசேஷத்தில் சேர்க்கப்பட்டு விட்டது என்றால், உங்களுடைய கையில் இருக்கும் இந்த சுவிசேஷத்தை எல்லாக் கூற்றுகளின் அடிப்படையிலும் இல்ஹாமைக் கொண்டது என்று ஏன் கூறுகிறீர்கள் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மஸீஹின் வாயிலிருந்து வெளிவந்த சில கூற்றுகளைத் தவிர சுவிசேஷங்களில் வேறு என்ன எழுதப்பட்டுள்ளனவோ, அவை தொகுத்தவரின் தனது கற்பனையும், தனது அறிவு மற்றும் புரிதலுக்கேற்ப இருப்பவையுமாகும். அவை தவற்றிலிருந்து விலகியவையாக இருக்க முடியாது என்று தெளிவாக ஏன் பகிரங்கப்படுத்துவதில்லை?

பாதிரிமார்களின் பொதுவான எழுத்துகளிலிருந்து எனக்குத் தெரிய வந்திருப்பதைப் போன்று, இந்தக் கருத்து பொதுவாக பகிரங்கப்படுத்தவும் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, சுவிசேஷங்களைப் பற்றி, அவற்றில் வரலாறு என்ற முறையில் அற்புதங்களைப் பற்றி காணப்படும் குறிப்புகள் இறை வெளிப்பாடு அல்ல. மாறாக, சுவிசேஷங்களை எழுதுபவர்கள் தங்கள் அனுமானம் அல்லது கேட்டது ஆகிய வெளிப்புறமான ஊடகங்களினால் எழுதி விட்டனர் என்று ஒருமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

சுருக்கமாக, பாதிரிமார்கள் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தால், சுவிசேஷங்களின் மீது ஏற்படும் பல தாக்குதல்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள விரும்பி இருக்கின்றனர். மேலும் ஒவ்வொரு சுவிசேஷங்களிலும் ஏறக்குறைய 10 பகுதி மனிதனின் கூற்று என்றும், ஒரு பகுதி இறைவனின் கூற்று என்றும் ஏற்றுக் கொண்டு விட்டனர். மேலும் இந்த ஒப்புதல் வாக்குமூலங்களினால் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களில் ஒன்று, இயேசுவின் அற்புதங்கள் அவர்களின் கைகளிலிருந்து சென்று விட்டன என்பதும் ஆகும். மேலும் அதற்குப் போதுமான, தெளிவான எந்தச் சான்றும் அவர்களிடம் இல்லாமற்போய் விட்டது. ஏனெனில் சுவிசேஷங்களை எழுதுபவர்கள் வரலாற்று அடிப்படையில் தம் புறமிருந்து மட்டுமே மஸீஹின் அற்புதங்களை சுவிசேஷங்களில் எழுதியிருக்கிறார்கள். ஆனால் இறை வெளிப்பாட்டின் கூற்று என்று கூறப்படுகின்ற மஸீஹின் தனது கலப்படமற்ற கூற்று சீடர்களின் கூற்றிலிருந்து மிகவும் வித்தியாசமானதாகவும், மாறானதாகவும் தெரிகிறது. இன்னும் கூறுவதென்றால், அது அதற்கு எதிரானதாகவும், முரண்பட்டதாக -வும் இருக்கிறது.



காரணம் என்னவென்றால், இறை வெளிப்பாட்டைக் கொண்டது என்று கூறப்படுகின்ற மஸீஹின் கூற்றில் இடத்திற்கிடம் அற்புதங்களைக் காட்டு -வதை (இயேசு) மறுத்தே வந்திருக்கிறார் -கள். மேலும் அற்புதங்களைக் கேட்பவர்களிடம், உங்களுக்கு எந்த அற்புதமும் காட்டப்பட மாட்டாது என்று தெளிவாக விடையளித்து விட்டார். ஏரோதுவும் மஸீஹிடம் அற்புதத்தைக் கேட்டார். அப்போது அவர் காட்டவில்லை. பலர் அவருடைய அடையாளங்களைப் பார்க்க விரும்பினர். மேலும் அடையாளங்களைப் பற்றி அவரிடம் கேள்வியும் கேட்கப்பட்டது. ஆனால் (இயேசுவாகிய) அவர் தெளிவாக மறுத்து விட்டார். எந்த அடையாளத்தையும் காட்ட முடியவில்லை. இன்னும் கூறுவதென்றால், அவர் முழு இரவும் விழித்திருந்து இறைவனிடம், தான் யூதர்களின் கையிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற அடையாளத்தைக் கேட்டார். அப்போது அந்த அடையாளமும் அவருக்குக் கிடைக்கவில்லை. அந்தப் பிரார்த்தனையும் மறுக்கப்பட்டது. பின்னர் சிலுவையில் அறையப்பட்ட பிறகு யூதர்கள் உண்மையான உள்ளத்துடன், இப்போது அவர் சிலுவையில் இருந்து உயிர் பெற்று இறங்கி வந்தால் நாங்கள் அனைவரும் அவர் மீது நம்பிக்கை கொள்வோம் என்று கூறினர். ஆனால் அவரால் இறங்கவும் முடியவில்லை.

எனவே இந்த எல்லா நிகழ்வுகளிலிருந்தும் தெளிவாக வெளிப்படுவது என்னவென்றால், சுவிசேஷங்களில் இருக்கின்ற இறையறிவிப்பின் சொற்றொடர்கள் இயேசுவை அற்புதங் -களைக் கொண்டவராக இருப்பது பற்றி தெளிவாக மறுத்து விடுகின்றன. மேலும் இயேசு அற்புதத்தைக் கொண்டவராக இருப்பதாகக் கருதுவதற்கான ஏதாவது சொற்றொடர் இருந்தாலும் உண்மையில் அந்தச் சொற்றொடர் இரண்டு கருத்துகளைக் கொண்டதாக இருக்கிறது. அதற்கு வேறு பொருளும் இருக்க முடியும். அதை வெளிப்படையான பொருளிலேயே புரிவது அவசியமானதாகத் தெரியவில்லை அல்லது தேவையில்லாமல் அதை இழுத்து வளைத்து சுவிசேஷங்களை எழுதியவர்கள் தம் சார்பாக குறிப்பிட்டுள்ள அந்த அற்புதங்களுக்கே பொருத்தமானது என்று குறிப்பிட வேண்டியதில்லை. மேலும் அற்புதம் நடந்ததையும், சான்றையும் தெளிவாகக் குறிப்பிடுகின்ற எந்தக் குறிப்பிட்ட சொற்றொடரும் மஸீஹின் நாவிலிருந்து வெளிப்பட்டதாக இல்லை. இன்னும் கூறுவதாயிருந்தால், மஸீஹிடமிருந்து ஓர் அற்புதம் கூட வெளிப்படவில்லை என்பதையே அவருடைய குறிப்பிட்ட, அழுத்தமான சொற்கள் சான்று பகர்கின்றன.★

மஸீஹின் சிறப்பான கூற்றாகவும், இறையறிவிப்பு -களைக் கொண்டது என்று அழைக்கப்படு -கின்றதும், மஸீஹின் வாயிலிருந்து சிறப்பாக வெளிவந்தவையுமாகிய அந்த விஷயங்களின் மீது கிறித்தவர்கள் ஏன் நம்பிக்கை கொள்வதில்லை என்பது வியப்பாக இருக்கிறது. மற்ற விஷயங்கள் ஏன் நம்பப்படுகின்றன? கிறித்தவர்களின் தமது ஒப்புதலுக்கேற்ப இறையறிவிப்பாக இல்லாததும், இன்னும் கூறுவதென்றால், அவை வரலாறு என்ற முறையில் சுவிசேஷங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன; அவை இறை அறிவிப்புகளை விட்டும் முற்றிலும் வெளியில் இருக்கின்றன. அவை இறையறிவிப்புகளின் சொற்றொடர்களுக்கு முற்றிலும் முரண்பாடாக இருக்கின்றன என்று இருக்கும்போது (சுவிசேஷங்களில் உள்ள) அந்த விஷயங்களின் மீது ஏன் இந்த அளவுக்கு அதிகமாக அழுத்தம் கொடுக்கப்படுகிறது?

எனவே இல்ஹாமிய சொற்றொடர்களுக்கும், இல்ஹாம் அல்லாத சொற்றொடர்களுக்கும் முரண்பாடு இருக்கும்போது அதை நீக்குவதற்காக இல்ஹாம் அல்லாத சொற்றொடர்கள் நம்பத்தகாதவை எனக் கருதப்பட வேண்டும். சுவிசேஷங்களை எழுதுபவர்களின் மிகைப்படுத்தப் -பட்ட கூற்றை நம்பாதிருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு என்ன வழி இருக்க முடியும்? இடத்திற்கிடம் அவர்களின் மிகைப்படுத்துதல் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. எடுத்துக்காட்டாக, புனித சுவிசேஷம் முடிக்கப்பட்டிருக்கும் யோவான் அத்தியாயத்தின் இறுதி வசனம் இதுவாகும்: 'இயேசு செய்த அநேக வேறு காரியங்களுமுண்டு. அவை -களை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் முழுவதும் கொள்ளாதென்று எண்ணுகிறேன்.' (யோவான் 21:25 காண்க மொழிபெயர்ப்பாளர்).

---

★தன்னை இறைவன் என்று ஒருபோதும் வாதிக்காத அந்த மஸீஹின் மு:ஜிஸா (அற்புதம்) பற்றி மட்டுமே திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் மஸீஹ் பலர் தோன்றியுள்ளார்கள்; இன்னும் தோன்றுவார்கள். பிறகு திருக்குர்ஆன் உண்மைப்படுத்துவது என்பது இரண்டு கருத்துகளைக் கொண்டவையாக இருக்கின்றன. அவை சுவிசேஷத்தை எழுதுபவர்களின் கூற்றுக்கு ஒருபோதும் பொருத்தமானவையாக இல்லை - நூலாசிரியர்.

பாருங்கள். எந்த அளவுக்கு மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது! வானம், பூமி ஆகியவற்றின் அற்புதங்களோ உலகத்திற்குள் அடங்கி விட்டது. ஆனால் மஸீஹின் மூன்று அல்லது இரண்டரை ஆண்டு வரலாறு உலகத்திற்குள் அடங்காமற் போய் விட்டதா? அப்படிப்பட்ட மிகைப்படுத்திக் கூறுபவர்களின் அறிவிப்பை எப்படி நம்ப முடியும்?

இந்துக்களும் தமது அவதாரங்களைப் பற்றி அப்படிப்பட்ட நூல்களையே எழுதியுள்ளனர். இவ்வாறே நன்றாக அனுமானங்களை நன்கு சேர்த்து சேர்த்து பொய்யை மிகைப்படுத்திக் கூறினர். எனவே அந்த சமுதாயத்திலும் இட்டுக்கட்டுவதற்கான இந்த உறுதியான பாதிப்பு ஏற்பட்டது. நாட்டின் இந்த எல்லையிலிருந்து அந்த எல்லை வரை ராம் ராம், கிருஷ்ணர் கிருஷ்ணர் என்பது உள்ளங்களில் பதிந்து விட்டது. விஷயம் என்னவென்றால், பல இட்டுக்கட்டுகள் நிரம்பி இருக்கின்ற தொகுக்கப்பட்ட நூல்கள் என்பவை வெளிப்புறத்தில் வெள்ளையடிக்கப்பட்டு ஒளியூட்டப்பட்டு இருக்கின்றதும், உள்ளே ஒன்றும் இல்லாமல் இருக்கின்றதுமான கல்லறைகளைப் போன்றவையாகும். நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர் பிறந்த, செய்தி அறியாத அந்த மக்களுக்கு, உள்ளே இருக்கும் நிலை பற்றி என்ன தெரிய முடியும்?

உருவாக்கப்பட்ட நூல்களை அருள்களாகவும், அப்பழுக்கற்றதாகவும் வெளிப்படுத்தி அவை அவர்களுக்கு அந்த வடிவிலேயே, அமைப்பிலேயே வானத்திலிருந்து இறங்கியதைப் போன்று கொடுக்கப்பட்டன. உண்மையில் அந்தத் தொகுப்பு எவ்வாறு ஆயத்தம் செய்யப்பட்டது என்பதைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? திரைகளைக் கிழித்தவாறு உள்ளே நுழைகின்ற, உண்மை நிலையைப் பற்றி தகவல் அறிகின்ற, திருடனைப் பிடித்து விடுகின்ற அத்தகைய கூர்மையான கண்கள் உலகில் மிகவும் குறைவானவையாகும். இட்டுக்கட்டும், மாயவித்தைக்காரர்-களால் தாக்கத்திற்குள்ளாகும் ஆன்மாக்கள் எந்த அளவுக்கு இருக்கின்றனவென்றால், அவற்றை அனுமானிப்பது கடினம் ஆகும். இதன் காரணமாகவே ஓர் உலகம் நாசமாகி விட்டது; நாசமாகிக் கொண்டிருக்கிறது. அறிவற்றவர்கள் சான்று இருப்பது அல்லது சான்று இல்லாமை என்ற அவசியமான விவகாரம் பற்றி கொஞ்சமும் சிந்திக்கவில்லை. மேலும் மனிதனின் திட்டங்கள் வழிவழியாக நடைமுறையில் இருந்து வருகின்ற முறையைப் பற்றியும், மனிதனிடம் தொன்மையில் இருந்தே நடைபெற்று வருகின்ற இயற்கையான விஷயத்தைப் பற்றியும் எச்சரிக்கையாக இருக்க (அறிவற்ற) அவர்கள் விரும்பவில்லை. அப்படியே ஷைத்தானிய வலையை தன் மீது போட்டுக் கொண்டார்கள்.

இந்த சதி வேலை செய்பவர்கள் ஓர் அப்பாவி இடமிருந்து ஆயிரம் ரூபாய்களைப் பெற்றுக் கொண்டு அவற்றை பத்து, இருபது இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கமாக மாற்றித் தருவதாக வாக்குறுதி அளிக்கின்ற ஒரு தீய இரசவாதியை (அதாவது ஓர் உலோகத்தை மற்றோர் உலோகமாக மாற்றும் வித்தைக்காரரை)ப் போன்று, ஏமாறும் அறிவிலிகளிடமிருந்து அவர்களின் உண்மை மற்றும் தூய நம்பிக்கையை அகற்றி விட்டு, நடைமுறையில் அறவே சாத்தியமில்லாததும், எவ்வித சான்றும் இல்லாததுமான பொய்யான நேர்மைக்கும், பொய்யான அருள்களுக்கும் வாக்குறுதி அளிக்கின்றனர். இறுதியில் விஷமத்தனங்களிலும், சதித் திட்டங்களிலும், உலகை வணங்குவதிலும், தீமையைத் தூண்டும் ஆன்மாவைப் பின்பற்றுவதிலும் அவர்கள் தம்மை விட மிக மோசமானவர்களாக (மக்களாகிய) அவர்களை ஆக்கி விட்டார்கள்.



இறுதியில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து வெளிப்பட்ட அற்புதங்கள், முன்னறிவிப்பு-கள் பற்றி திருக்குர்ஆனின் ஒரு சிறிய சாட்சி என்பது மஸீஹின் அற்புதம் பற்றி சுவிசேஷங்களில் இருக்கும் குவியலை விட ஆயிரக்கணக்கான மடங்கு அதிகமானதாக இருக்கிறது என்ற விஷயம் நினைவில் கொள்ளத்தக்கதாகும். ஏன் அதிகமாக இருக்கிறது? ஏனெனில் ஆய்வு செய்கின்ற எல்லா பாதிரிமார்களின் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி, சுவிசேஷங்களின் கூற்று, சீடர்களின் சொந்த கூற்றே ஆகும் அவை அவர்களின் கண்களால் கண்டதுமல்ல. மேலும் அறிவிப்பாளர்களின் தொடரை அவர்கள் எடுத்து வைக்கவும் இல்லை. ஏதும் சுயமாக கண்டதாக வாதிக்கவுமில்லை. ஆனால் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களைப் பற்றி என்ன எழுதப்-பட்டுள்ளனவோ அவை உண்மையாளனும், மிகவும் பரிசுத்தமானவனுமாகிய இறைவனின் சிறப்பான, தூய்மை-யான சாட்சி ஆகும். அது ஒரு வசனமாக இருந்தாலும் அது போதுமானதாகும். ஆனால் இந்த சாட்சிகளால் முழுக் குர்ஆனும் நிரம்பி காணப்படுகின்றன - அல்ஹம்துலில்லாஹ். இப்போது பொய்யிற்கான சாத்தியமே இல்லாத இறைவனின் தூய சாட்சி எங்கே? பார்க்கப்படாத பொய் எங்கே? மிகைப்-படுத்திக் கூறப்பட்ட சாட்சிகள் எங்கே என்பதை பகுப்பாய்வு செய்து பார்க்க வேண்டும்.

بہ نذدیک دانائے بیدار دل          جوئے سیم بہتر زِ صدتودہِ گِل

பாரசிக கவிதையின் பொருள்:

'விழிப்புணர்வுள்ள உள்ளத்தைக் கொண்ட அறிவாளியின்
பார்வையில் சிறிது வெள்ளியும் மண்ணின்
நூற்றுக்கணக்கான குவியல்களை
விடச் சிறந்ததாகும்.'

இட்டுக்கட்டப்பட்ட விஷயங்கள் என்பதைப் பற்றி ஏன் ஆச்சரியப்பட வேண்டும்? அவ்வாறு ஏராளமாக நடந்திருக்-கின்றன; நடக்கின்றன. எங்களில் பலர் தொடக்க காலங்களில் தம் சார்பாக நூல்களை உருவாக்கி, எங்களின் பெரியார்-களின் பல சிறப்புகளை அவற்றில் எழுதி, பின்னர் அவற்றை இறைவனுடன் தொடர்புபடுத்தி வந்திருக்கின்றோம் என்பதையும், அவை இறைவன் புறமிருந்து வந்த நூல்கள் ஆகும் என்று வாதிக்கப்பட்டு வந்திருந்தன என்பதையும் கிறித்தவர்களே ஏற்றுக் கொள்கின்றனர்.★

எனவே கிறித்தவர்களிடமும், யூதர்களிடமும் செயற்கையாக உருவாக்கும் இந்தப் பழமையான பகட்டுத்-தன்மையின் பழக்கம் நடைமுறையில் இருந்து வந்திருக்கும் போது, மத்தேயு சுவிசேஷத்தை (இடைச் செறுகலை உருவாக்கும்) இந்தப் பழக்கத்திலிருந்து ஏன் வெளியில் வைக்க வேண்டும் என்பதற்கு எந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் எவருடைய நாட்கணக்கும், பதிவேடும் தெளிவான முரண்பாடு மற்றும் சந்தேகத்தின் காரணத்தால் மறைவான நிலையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் அந்த வியாபாரியைப் போன்று, அவர்கள் மறைத்து வைக்க விரும்பியிருந்த சூழ்ச்சி நான்கு சுவிசேஷங்களிலிருந்தும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகத்தான் ஐரோப்பா, அமெரிக்காவில் சிந்திக்கக் கூடிய இயல்புகளில் சந்தேகங்கள் எனும் ஒரு சூறாவளிக் காற்று உருவாகி விட்டது. மேலும் எந்த குறைபாடுள்ள, மாறிக் கொண்டிருக்கின்ற உடலைக் கொண்ட இறைவனின் பக்கம் சுவிசேஷம் வழிகாட்டுகிறதோ அதை ஏற்றுக் கொள்வதை விட நாத்திகராக இருப்பதை அவர்கள் அதிகம் விரும்புகிறார்கள். ஆங்கிலக் கல்வி படித்துப் பட்டம் பெற்ற எனது ஒரு நண்பர் அமெரிக்காவிலிருந்து தனது பல கடிதங்களின் மூலமாக, ‘அந்த நாடுகளில் அறிவாளிகளைச் சேர்ந்த எவரும் கிறித்தவ மதத்தைக் குறைபாட்டிலிருந்து விலகியிருப்பதாகக் கருதுபவர் இல்லை. (அதாவது கிறித்தவ மதத்தைக் குறைபாடுள்ளதாகவே கருதுகின்றனர்) என்றும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தம் இல்லாத எவரும் இல்லை’ என்றும் எனக்குத் தெரிவித்திருக்கிறார்.

கிறித்தவர்கள் திருக்குர்ஆனின் மொழியாக்கத்தைத் திரித்த தோற்றமுள்ளதாவும் ஆக்கி ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வெளியிட்டிருக்கிறார்கள் என்றாலும், அதில் மறைந்துள்ள ஒளி தூய்மையான உள்ளங்களின் மீது தனது வேலையைச் செய்கிறது. சுருக்கமாக, அமெரிக்காவும், ஐரோப்பாவும் இன்றைய காலத்தில் ஓர் ஆவேசமான நிலையில் இருக்கின்றது. மேலும் உண்மைக்குப் புறம்பாக இருக்கின்ற சுவிஷேசங்களின் கொள்கைகள் அவர்களை சில முழுமையான ஆசிரியர்கள் முழு சுவிசேஷங்களையும் கூட தம் சார்பாக உருவாக்கி, பொதுவாக சமுதாயத்தில் அவற்றை வெளியிட்டு விட்டனர். ஓர் அணுவளவும் அதில் வித்தியாசம் ஏற்படவிடவில்லை.

ஒரு வேதத்தை மாற்றுவதற்கும், திருத்துவதற்கும் அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? பிறகு மஸீஹின் காலத்தில் இந்த சுவிசேஷங்கள் எழுதப்படவில்லை. மாறாக, மஸீஹ் அவர்களின் மரணத்திற்கு அறுபது, எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது கொஞ்சம் கூடுதல் குறைவாக அல்லது அறிவிப்புகளின் முரண்பாட்டுடன் நான்கு சுவிசேஷங்களின் தொகுப்பு உலகில் உருவானது என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆக, இதிலிருந்து அந்த சுவிசேஷங்களைப் பற்றி மேலும் அதிக சந்தேகம் உருவாகிறது. ஏனெனில் அந்தக் காலம் வரை சீடர்கள் உயிரோடு இருந்தார்களா? அல்லது அவர்களின் சமுதாயங்கள் நிலைபெற்-றிருந்தனவா என்பதற்குச் சான்று தருவது கடினமானதாகும்.

இப்போது இந்த எல்லா விஷயங்களையும் சுருக்கமாக்கி, வாசகர்களுக்கு நாம் உறுதியாகக் கூறுவது என்னவென்றால், பன்னிரெண்டு சுவிசேஷங்களும் செயற்கையானவையும், பழக்கத்தில் கொண்டு வந்திருக்கின்ற நான்கு சுவிசேஷங்களும் செயற்கையிலிருந்தும், மாற்றத்திலிருந்தும் தூய்மையானவையாக-வும் இருக்கின்றன என்று கிறித்தவர்கள் ஒருபோதும் தெளிவாக சாட்சி கூறவில்லை. மாறாக, அவர்கள் அந்த நான்கைப் பற்றியும் அவை இறைவனுடைய கலப்படமற்ற கூற்றுகள் இல்லை என்று அவர்களே ஒப்புக் கொள்கின்றனர். மேலும் அவர்கள் அப்படி ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும், சுவிசேஷங்கள் கலப்படம் நிறைந்தவையாக இருக்கின்றன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஏனெனில் மற்ற சுவிசேஷங்கள் ஏன் செயற்கையானவை-யாக இருக்கின்றன. இவை செயற்கையானவை அல்ல என்பதற்கான சான்றை வழங்குவது அவர்களின் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பிலிருந்து இன்று வரை அவர்கள் விடுதலையாக முடியவில்லை - நூலாசிரியர்.

---

★சுவிசேஷங்களில் ஹஸ்ரத் மஸீஹைப் பற்றிய ஆதாரமற்றவையும், சான்றில்லாதவையும், மிகைப்படுத்திக் கூறப்பட்டவையுமாகிய அற்புதங்கள் அல்லது அவர்களைக் குறித்த தேவையற்ற புகழ்ந்துரைகள் பற்றி காணப்படும் சுவிசேஷத்தில் எப்போது, எந்த காலத்தில் இந்த விஷயங்கள் சேர்க்கப்பட்டு விட்டன என்பதைப் பற்றி ஆய்வு செய்வது கடினமாகும். இந்த விஷயங்களை சுவிசேஷத்தை எழுதுபவர்கள் தம் சார்பாக சேர்த்து விட்டனர் என்பதை கிறித்தவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். ஆயினும் இந்த எளியவன் அறிந்த வரை, இந்த சுய விளக்கங்கள் கொஞ்சம் கொஞ்சமாக சேர்ந்துள்ளன. மேலும் செயற்கையாக சேர்க்கும் சூழ்ச்சிக்காரர்கள் பின்னாலிருந்து பல சந்தர்ப்பங்களைப் பெற்று வந்தனர். எனினும் இல்ஹாமிய நூல்கள் என்ற பெயரால் பிரபலமாகி விட்ட நிரந்தரமான பல செயற்கை நூல்களை கிறித்தவர்களும், யூதர்களும் ஆரம்ப நாட்களிலேயே இயற்றி வெளியிட்டு விட்டனர். ‘இந்த செயற்கைத்-தன்மையின் அருளாலேயே’ ஒரு சுவிசேஷத்திற்குப் பதிலாக பல சுவிசேஷங்கள் வெளியாகி விட்டன(!)

(இங்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ‘யூதர்கள், கிறித்தவர்களின் இந்த செயற்கைத்தன்மையின் அருளாலேயே’ என்பதை வஞ்சப்புகழ்ச்சியாகக் குறிப்பிடுகிறார்கள் - மொழிபெயர்ப்பாளர்).

மஸீஹுக்குப் பிறகு செயற்கையான சுவிசேஷங்கள் பல எழுதப்பட்டன. அவற்றுள், பர்னபாஸ் சுவிசேஷமும் ஒன்றாகும் என்று கிறித்தவர்களே கூறுகின்றனர். இதுவோ கிறித்தவர்களின் கூற்று ஆகும். ஆனால் நான் கூறுகிறேன்: அந்த சுவிசேஷங்களுக்கும், புழக்கத்தில் இருக்கும் நான்கு சுவிசேஷங்களுக்கும் பல முரண்பாடுகள் இருக்கின்றன. எதுவரையென்றால், பர்னபாஸ் சுவிசேஷம் மஸீஹ் சிலுவையில் அறையப்பட்டார் என்பதையும் மறுக்கிறது. திரித்துவக் கொள்கைக்கும் எதிரானது. மஸீஹின் இறைதன்மை, தேவ குமாரன் ஆகியவற்றையும் ஒப்புக் கொள்ளவில்லை. மேலும் இறுதிக் காலத்தில் தோன்றும் நபி (ஸல்) அவர்களைப் பற்றியும் தெளிவான சொற்களில் நற்செய்தி கூறுகிறது.

இப்போது எந்த சுவிசேஷங்களைக் கிறித்தவர்கள் புழக்கத்தில் கொண்டு வந்திருக்கின்றனரோ, அவை உண்மையானவை ஆகும். அவற்றிற்கு எதிரானவையாக இருக்கின்ற அனைத்தும் பொய்யானவை ஆகும் என்ற கிறித்தவர்களின் சான்று இல்லாத இந்த வாதத்தை நாம் எவ்வாறு ஏற்றுக் கொள்வது? அது மட்டுமின்றி, செயற்கையாக ஆயத்தம் செய்யும் இந்தச் செயல் கிறித்தவர்களிடம் இந்த அளவுக்கு சூடு பிடித்திருக்கும் நிலையில்,

ஒரு மாபெரும் பதற்றத்தில் ஆழ்த்தி விட்டது. எதுவரை -யென்றால், மஸீஹ் அல்லது ஈஸா என்ற பெயரைக் கொண்ட எவரும் வெளிப்படையில் ஒருபோதும் பிறக்கவில்லை. மாறாக, அதன் கருத்து சூரியன் என்பதாகும். மேலும் பன்னிரெண்டு சீடர்கள் என்பதன் கருத்து, பன்னிரெண்டு நட்சத்திரங்கள் என்பதாகும் என்ற கருத்தை சிலர் வெளிப்படுத்தினர். மேலும் எந்த அடையாளங்களை ஹஸ்ரத் மஸீஹ் (அலை) நம்பிக்கை கொண்டவர்களுக்குரியவை என்று குறிப்பிட்டிருந்தார்களோ அவற்றில் ஒன்று கூட (இயேசுவின் மீது நம்பிக்கை கொண்ட) அவர்களிடம் காணப்படவில்லை என்பதன் மூலமாக கிறித்தவ மதத்தின் உண்மை நிலை மிக அதிகமாக வெட்ட வெளிச்சமாகிறது. அது என்னவெனில், நீங்கள் என்னைப் பின்பற்றுவீர்கள் என்றால், எல்லாவிதமான அருளிலும், ஏற்றுக் கொள்ளப்படுவதிலும் எனது வடிவமாகவே நீங்கள் ஆகி விடுவீர்கள். மேலும் மு.்.ஜிஸாத்துகள் (அற்புதங்கள்) மற்றும் (இறைவனிடத்தில்) அங்கீகரிப்படுவது ஆகிய அடையாளங்கள் உங்களுக்கு வழங்கப்படும். நீங்கள் பலவிதமான அடையாளங்களைக் காட்ட முடியும். நீங்கள் என்ன விரும்புவீர்களோ அதுவே உங்களுக்கு ஏற்படும். உங்களுக்கு சாத்தியமில்லாது எதுவும் இருக்காது. இதுவே நீங்கள் நம்பிக்கை கொண்டவர்கள் என்பதற்கான அடையாளமாகும்.

ஆனால் கிறித்தவர்களின் கையில் இந்த அருள்களில் எதுவும் இல்லை. அவர்கள் தனது சிறப்பான அடியார்களின் துஆக்களைக் கேட்கின்ற, அவர்களுக்கு முன்பாக பரிவான, அருளுக்கான விடையை வழங்குகின்ற, அவர்களுக்கு அற்புதத்திலும் அற்புதமான வேலைகளைச் செய்து காட்டுகின்ற அந்த இறைவனைப் பற்றி ஒன்றும் அறியாதவர்களாக இருக்கின்றனர். ஆனால் நேர்வழிபெற்றவர் -களின் பிரதிநிதிகளாகவும், வாரிசுகளாகவும் இருக்கின்றவர் -களும், இவர்களுக்கு முன்னர் சென்று விட்டவர்களுமாகிய உண்மையான முஸ்லிம்கள் அந்த இறைவனை அடையாளம் கண்டு கொள்கின்றனர். அவனது அருளின் அடையாளங் -களைப் பார்க்கின்றனர். மேலும் தமது எதிரிகளின் முன்னால் இருளுக்கு எதிராக இருக்கின்ற சூரியனைப் போன்று தனிச் சிறப்பானவர்களாக இருக்கின்றனர். இந்த வாதத்தை சான்று இல்லாதது என்று கருதக் கூடாது என்று நாம் மீண்டும் மீண்டும் எழுதி இருக்கிறோம்.

(தொடரும்...)

# ஜமாஅத்தாகத் தொழுவதன் முக்கியத்துவம்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:



எல்லா மனிதர்களையும் ஓர் உயிரைப் போன்று ஆக்கிவிட வேண்டும் என்பது அல்லாஹ்வின் நாட்டமாகும். இதற்கே ஜனநாயக ஒற்றுமை என்று பெயராகும்.

தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்: மார்க்கத்தின் நோக்கமும் இதுவேயாகும். தஸ்பீஹிலுள்ள மணிகளைப் போன்று ஜனநாயக ஒற்றுமை என்ற சரடில் அனைவரும் ஒன்றாக கோர்க்கப்பட வேண்டும். (அதாவது மார்க்கம் என்பது அனைவரையும் ஒன்றுபடுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்). ஜமாஅத்தான தொழுகையும் கூட இந்த நோக்கத்திற்காகவே இருக்கின்றது. அதாவது எல்லாத் தொழுகையாளிகளும் ஒரு நபர் போன்று ஆகிவிட வேண்டும். பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் இணைந்து நிற்க வேண்டும் என்ற கட்டளை கூறப்பட்டிருப்பதன் நோக்கம் எவரிடம் அதிகமாக ஒளி இருக்கின்றதோ அது பலவீனமானவர்களிடம் ஊடுருவி அவருக்கு ஆற்றலை வழங்க வேண்டும். இதற்காகவே அல்லாஹ் இந்தக் கட்டளையைப் பிறப்பித்துள்ளான். அதாவது, மக்கள் தத்தமது பகுதியிலுள்ள பள்ளிவாசலில் தொழுகைக்காக ஒன்றுசேர வேண்டும். (அதாவது தொழுகையின் மூலம் ஒருவர் மற்றவரிடமிருந்து ஆற்றலைப் பெற வேண்டும்). எல்லா ஒளிகளும் ஒன்று சேர்ந்து பலவீனத்தை அகற்ற வேண்டும். பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கிடையில் அறிமுகம் ஏற்பட்டு அன்பு உருவாக வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அறிமுகமாவது மிகவும் சிறந்த விஷயமாகும். இதன் காரணமாக அன்பு வளர்கின்றது. அதுவே ஒற்றுமையின் அடித்தளமாக இருக்கின்றது.

எனவே, ஜமாஅத்தாக தொழுவதன் மூலம் எங்கு மனிதனுக்கு சுயமாகவும் பலன் கிடைக்கின்றதோ அங்கு ஜமாஅத் அளவிலான பலனும் கிடைக்கின்றது. சிலர் பள்ளிவாசலுக்கு வருவதில்லை. சிலர் பள்ளிவாலுக்கு வந்து தமக்கும் மற்றவர்களுக்கும் இடையிலுள்ள பகைமை உணர்வை அகற்றி அன்பை உருவாக்குவதில்லை. அவர்களுக்கு அவர்கள் தொழும் தொழுகைகள் எந்தப் பலனையும் தராது. ஏனென்றால், தொழுகையின் நோக்கமானது இறைவனை வணங்குவது மட்டுமின்றி ஒற்றுமையை உருவாக்குவதும் ஆகும். அந்த குறிக்கோள் ஒருவர் மற்றவர் மீது அன்பு கொள்ளாமல் கிடைக்க முடியாது. இந்த சிந்தனையுடன் நாம் நமது தொழுகைகளை பாதுகாக்கவும் வேண்டும். இந்த சிந்தனையுடன் நாம் பள்ளிவாசலுக்கு வர வேண்டும். அதாவது நாம் ஒன்றாக ஆகி அல்லாஹ்வின் முன்னிலையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தொழுகைகளைத் தொழக் கூடியவர்களாகவும் அவனது திருப்தியைப் பெறக் கூடியவர்களாகவும் ஆகிவிட வேண்டும்.

**(ஜுமுஆ குத்பா 15.01.2016)**

# துஆக்களை செவியேற்பவன் எனும் பண்பின் ஒளியில் இறையிருப்பு

மவ்லவி முஹம்மத் ஹமீத் கவ்ஸர் ஸாஹிப் (Nazir Dawate ilallah Shumali Hind Qadian)

தமிழாக்கம்: இப்னு வஸீம்



'துஆக்களை செவியேற்பவன்' என்ற அல்லாஹ்வின் இந்தப் பண்பின் மூலம் நாம் அவனை அடையாளம் கண்டு கொள்ளும் பொருட்டு, அவனது இந்தப் பண்பின் அடிப்படையில் இறையிருப்பைப் பற்றி நான் சற்று எடுத்துரைக்க இருக்கிறேன்.

அல்லாஹ், 'என்னை அழைத்திடுங்கள். நான் உங்கள் அழைப்புக்கு பதில் அளிப்பேன்' என்று கூறுகிறான். இன்றைய புதிய தலைமுறை மார்க்கத்தையும் அல்லாஹ்வையும் விட்டு விலகிச் செல்வதற்கான காரணம், அவர்களின் மதத் தலைவர்கள் அவர்களுக்கு அல்லாஹ்வைப் பற்றிய ஞானத்தைப் பெறுவதற்கும், அவனை அடையாளம் கண்டு கொள்வதற்கும் கூறும் வழிமுறைகள் விளைவைத் தரக்கூடியவையாக நிரூபணமாவதில்லை என்பதாகும்.

இதை ஓர் எடுத்துக் காட்டின் மூலம் புரியலாம். ஒரு மனிதன் தனது ஒரு தேவையை நிறைவேற்றுவதற்காக, ஒரு வீட்டின் கதவை வீட்டுக்காரர் தனக்கு உதவி புரிவார் என்ற நம்பிக்கையில் தட்டுகிறார். ஆனால், மீண்டும் மீண்டும் தட்டியும் கதவு திறக்கவில்லை என்றால், அவர் வீட்டுக்குள் யாரும் இல்லை. இருந்தால் பதில் அளித்திருப்பார் என்ற முடிவுக்கு வருவதில் அவர் பக்கம் உண்மை இருக்கும். அவர் நம்பிக்கையிழந்து இறைவனது இருப்பே இல்லை எனக் கருதுகிறார். அதற்கு நிகராக சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "தேடுபவர் காணப் பெறுகிறார். கேட்பவருக்கு வழங்கப்படு -கிறது. தட்டுபவருக்காகத் திறக்கப்படுகிறது." (பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 4. ரூஹானி கஸாயின் தொகுதி 01, பக்கம் 429-430)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கவிதையில் கூறுகிறார்கள்:

இறை அவையை விட்டும் நீ<br>இவ்வாறு அவநம்பிக்கை அடைந்து இருந்து விடாதே!

சிரமங்களைத் தீர்ப்பவனுக்கு முன்<br>இந்த சிரமங்களுக்கு என்ன பொறுமதி இருக்கிறது

பலவீனமான மனிதர்கள் எங்கேயிருந்து<br>உன் தேவைகளை நிறைவேற்றப் போகின்றனர்

தேவைகளை நிறைவேற்றுபவனுக்கு முன்னால்<br>எல்லாத் தேவைகளையும் எடுத்துரைத்து விடு!

இந்தக் கவிதைகளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் இவ்வாறு அறிவுரை கூறுகிறார்கள்: நீ உனது இந்த பௌதிக வாழ்வில் நிரந்தரமாகவும், கட்டாயமாகவும் துன்பம் துயரம், அவநம்பிக்கை, வேதனை, கவலை இன்னல் மற்றும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி வரும். அதற்கான சிகிச்சையாவது, நீ இறை அவையை விட்டும், அதாவது, அல்லாஹ்விடம் அவநம்பிக்கை அடைந்து விடாதே! சிரமங்களைத் தீர்ப்பவனுக்கு முன் உன்னுடைய சிரமங்களை எடுத்துரைத்துக் கொண்டே செல்! உன்னுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக அவனது வாயிலிலேயே சாய்ந்திரு! சிரமங்களைத் திர்க்கும் அவனே உன்னுடைய தேவைகளை நிறைவேற்றுவான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தின் இலட்சக்கணக்கான மக்கள் இந்த ஆன்மிக உத்தியை முயற்சி செய்துள்ளார்கள். துஆக்களை செவியேற்பவனான அல்லாஹ்வின் கதவுகளைத் தட்டினார்கள். அவர்களுக்காக இறைவனின் அவை திறக்கப்பட்டன. இவ்வாறே சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரியின் மூலமாகவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அழகிய முன்மாதிரியின் மூலமாகவும் தெரிய வருவதாவது, ஒவ்வோர் இன்னல் வரும்போதும், ஹுஸூர் (அலை) அவர்கள் துஆக்களை செவியேற்பவனான அல்லாஹ்வின் கதவுகளைத் தட்டினார்கள். கருணையும் பரிவும் மிக்க இறைவன் அன்னாருடைய துஆக்களை ஏற்றுக் கொண்டான்.

இந்தக் கருத்தை இன்னும் விளக்கிக் கூறுவதற்காக இந்த சில எடுத்துக்காட்டுகள் முன் வைக்கப்படுகின்றன: ஒரு கணிப்பின்படி, சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்களுக்கு முதல் வஹீ கி.பி. 610 ஆகஸ்டு 20 அன்று வந்தது. துவக்கத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெரிதும் எதிர்க்கப்படவில்லை. ஆனால், இஸ்லாத்தில் நுழைபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைப் பார்த்து மக்கத்தினர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கடுமையாக எதிர்க்கத் துவங்கி விட்டனர்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை இஸ்லாத்தைப் பரப்புவதிலிருந்தும் தடுப்பதற்காக ஆகுமான, ஆகாத முயற்சிகள் என அனைத்தையும் செய்தனர். இந்த எதிர்ப்புகளும் தடைகளும் எல்லையை எட்டிய பிறகு சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.:பா (ஸல்) அவர்கள் துஆக்களை செவியேற்பவனான இறைவனின் கதவைத் தட்டியவாறு மிகவும் வேதனையுடன் இவ்வாறு துஆ செய்தார்கள்:


اَللّٰهُمَّ اعِزَّ الْإِسْلَامَ بِابِي جَهْلِ بْنِ هِشَامٍ اوْبِعُمَرَ بْنِ الْخَطَّابِ

அதாவது, அல்லாஹ்வே! அபூ ஜஹ்ல் அல்லது உமர் பின் .:ஹத்தாப் மூலமாக இஸ்லாத்திற்கு உதவியையும் ஆதரவையும் அளிப்பாயாக! (மிஷ்காத் கிதாபுல் .:பிதன்: 5787)

ஒருபுறம் ஹுஸூர் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். மறுபுறம் அன்றைய நாள்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கடும் எதிரியாகவும் பகைவராகவும் இருந்து வந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தில், 'ஏன் இந்த மார்க்கத்தைத் தோற்றுவித்தவரையே கொன்று விடக்கூடாது' என்ற சிந்தனை பிறந்தது. இந்த சிந்தனை வந்ததுமே அவர்கள் வாளைக் கையில் ஏந்திப் கொண்டு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கொல்வதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டார்கள். வழியில் ஒருவர், 'உமர்! எங்கே செல்கிறீர்?' எனக் கேட்டார். அதற்கு அவர்கள் நான் முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொல்வதற்காக செல்கிறேன் என பதில் அளித்தார்கள். அந்த நபர் சிரித்துக் கொண்டே, 'முதலில் உமது வீட்டைப் பற்றி செய்தி அறிந்து கொள்ளும். உம் சகோதரியும் சகோதரியின் கணவரும் முஸ்லிம் ஆகி விட்டார்கள்' என்று கூறினார். இதைக் கேட்டதுமே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம் சகோதரி மற்றும் சகோதரியின் கணவர் வீட்டுக்குச் சென்றார்கள். அவர்கள் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பதை வெளியிலிருந்து கேட்டார்கள். வீட்டுக்குள் நுழைந்த உடனேயே தம் சகோதரியின் கணவரை அடிப்பதற்குச் சென்றார்கள். அன்னாருடைய சகோதரி தம் கணவரைக் காப்பாற்றுவதற்காக நடுவில் வந்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கை ஓங்கி விட்டிருந்தார்கள். அன்னாருடைய சகோதரி தீடீரென்று நடுவில் வந்து விட்டார்கள். எனவே, அவர்களால் கையை நிறுத்த முடியவில்லை. அன்னாரது கை ஓங்கி அவர்களது மூக்கில் பட்டது. அதிலிருந்து இரத்தம் வடியத் துவங்கியது.

சகோதரியின் இரத்தம் வடிவதைக் கண்டதுமே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்த துஆவின் தாக்கம் வெளிப்படத் துவங்கியது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'நீங்கள் என்ன படித்துக் கொண்டிருந்தீர்கள் சொல்லுங்கள்!' எனக் கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் மென்மைக்கான உணர்வுகள் உருவாகி விட்டதை சகோதரி புரிந்து கொண்டார்கள். அவர்கள், 'போய் விடுங்கள்! உங்களைப் போன்ற மனிதரின் கையில் நான் அந்தத் தூய பொருளைத் தர ஆயத்தமாக இல்லை' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'பிறகு நான் என்ன செய்யட்டும்?' என்று கேட்டார்கள். அதற்கு சகோதரி, 'அதோ தண்ணீர் இருக்கிறது. குளித்து விட்டு வாருங்கள். அப்போதுதான் அந்தப் பொருளை உங்கள் கையில் தர முடியும்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குளித்து விட்டு திரும்பி வந்தார்கள்.

அன்னார் செவியேற்ற, திருக்குர்ஆனின் அந்தப் பக்கங்களை சகோதரி அன்னார் கையில் தந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. எனவே, திருக்குர்ஆன் வசனங்களைப் படித்ததுமே அவர்களுக்குள் உருக்கம் உருவானது. அவர்கள் அந்த வசனங்களை ஓதி முடித்ததும், தம்மையும் அறியாமல், அஷ்ஹது அ(ன்)லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது



அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் என்று கூறினார்கள். இதற்குப் பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?' என்று வினவினார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் தாரே அர்கமில் இருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உடனடியாக அதே நிலையில் அங்கு சென்றடைந்து கதவைத் தட்டினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு எதிர்பாராத விதமாக வந்ததனால், முஸ்லிம்கள் அச்சமடைந்தனர். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் புதிதாக நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அவர்கள் போர்வீர இயல்புடைய மனிதராக இருந்தார்கள். அவர்கள், 'கதவைத் திறந்து விடுங்கள். அவர் என்ன செய்கிறார் என்று நான் பார்க்கிறேன்' என்று கூறினார்கள். எனவே, ஒருவர் கதவைத் திறந்து விட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முன்னோக்கி வந்ததும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'உமர்! எதற்காக வந்திருக்கிறீர்?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! (ஸல்) நானோ தங்களுக்கு அடிமை ஆக வந்துள்ளேன்' என்று கூறினார்கள். இதைக் கேட்டதுமே முஸ்லிம்களிடத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தது. அவர்கள் உணர்ச்சி பொங்கி தக்பீர் முழக்கத்தை எழுப்பினார்கள். (த.:ப்ஸீரே கபீர் தொகுதி 6, பக்கம் 141முதல் 142)

சற்று ஆழ்ந்து கவனம் செலுத்துங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கடுமையான எதிர்ப்பை எதிர்

கொண்டார்கள். ஹுஃஸூர் (ஸல்) அவர்கள் துஆக்களை செவியேற்பவனான இறைவனின் கதவைத் தட்டினார்கள். அல்லாஹ் அன்னாரது துஆவை ஏற்றுக் கொண்டான். இஸ்லாத்தின் பக்கம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தைத் திறந்து விட்டான். அல்லாஹ்வால் மட்டுமே இவ்வளவு பயங்கரமான எதிரியை இஸ்லாத்தை ஏற்பதற்கு இணங்க வைக்க முடிந்தது. வேறு எவரும் இந்த மாற்றத்திற்கான ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை என்பது இந்த நிகழ்விலிருந்து நிரூபணமாகிறது.

இதே போன்ற ஒரு நிகழ்வு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய வாழ்விலிருந்து கிடைக்கிறது. ஹுஃஸூர் (அலை) அவர்கள் தமது அரபு வாக்கியம் ஒன்றில் கூறுகிறார்கள். அதன் சுருக்கம் இதுவாகும்:



“நான் இரவு பகலாக அழுது மன்றாடியவாறு, ‘என் இறைவா! அடியார்களில் என் உதவியாளர் யார்? அல்லாஹ்வே! நான் வலுவிழந்த மனிதன் ஆவேன்’ என்று வேண்டிக் கொண்டிருந்தேன். நான் துஆவுக்காக தொடர்ச்சியாகக் கையை உயர்த்திக் கொண்டிருந்தபோது, துஆக்களால் விண்ணின் சூழல் நிரம்பியதும், எனது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. அனைத்துலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வின் கருணை பொங்கி எழுந்தது. கருணையுள்ள இறைவன் எனக்கு உண்மையான தோழரை வழங்கினான். அவரது ஒளிமிகுந்த இயல்பைப் போன்று அவர் பெயரும் நூருத்தீன் (மார்க்கத்தின் ஒளி) ஆகும். (ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் என்ற நூலின் அரபு வரியின் சுருக்கம். ரூஹானி கஸாயின் தொகுதி 05, பக்கம் 581-582)

ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் நடைபெற்ற தமது முதல் சந்திப்பைப் எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்: நான் ஜம்முவிலிருந்து பட்டாலாவுக்கு வந்தேன். அங்கிருந்து குதிரை வண்டி மூலமாக காதியானுக்கு வந்து சேர்ந்தேன்.காதியானில் இப்பொழுது முபாரக் பள்ளிவாசலின் கிழக்கில் பெரிய Gate இருக்கும் இடத்தை வந்தடைந்து குதிரை வண்டி ஓட்டுபவரிடம், ‘மிர்ஸா சாஹிப் அவர்களின் வீடு எது?’ என்று கேட்டேன். அதற்கு அவர் மிர்ஸா இமாம் தீனை அறிமுகப்படுத்தி வைத்து விட்டார். அவரைப் பார்த்ததும், நான் இந்த மனிதரை ஒன்றும் சந்திக்க வரவில்லையே என்று எனது உள்ளம் மிகவும் கனத்தது. அந்த நபரே, ‘நீங்கள் மிர்ஸா குலாம் அஹ்மத் சாஹிப் அவர்களை சந்திக்க வேண்டும் என்றால், அவர் வீடு பின்பக்கம் இருக்கிறது’ என்று கூறினார். அவர் கூறியதைக் கேட்டதும், அப்பாடா! இப்பொழுது நான் தேடுகின்ற அந்த மிர்ஸா எனக்குக் கிடைத்து விடுவார் என்று எனக்கு உயிரே வந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அஸ்ர் தொழுகைக்குப் பிறகு முபாரக் பள்ளிவாசலுக்கு வடமேற்கு திசையிலுள்ள சிறிய படிகட்டுகள் வழியாகக் கீழே வருகை தந்து கொண்டிருந்தார்கள். மௌலானா நூருத்தீன் சாஹிப் அவர்களது பார்வை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய முகத்தின் மீது பட்டதுமே அவர்கள் தமது மனதில், ‘இவர்கள்தான் மிர்ஸா ஆவார்கள். நான் முழுவதுமே இவர்களுக்கு அர்ப்பணம் ஆகி விட வேண்டும்’ என்று கூறினார்கள். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 212)

அல்லாஹ்வின் இருப்பு இருக்கிறது; அது வேதனை -யுடன் துஆ செய்யும் ஒவ்வொருவருடைய துஆவையும் ஏற்றுக் கொள்கிறது என்பது இந்த நிகழ்விலிருந்து, பட்டப்பகல் சூரியனைப் பேன்று தெளிவாகிறது. ஆனால், நிபந்தனை என்னவென்றால், அந்த துஆ, ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள்படி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இஸ்லாமிய வரலாற்றில் முதன்முதலாக நடைபெற்ற போர் பத்ர் யுத்தம் ஆகும். இந்த யுத்தம் ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு ரமலான் பிறை 17, அதாவது, கி.பி. 624 ஆம் ஆண்டு மார்ச் 14 அன்று பத்ர் எனும் மைதானத்தில் நடந்தது. மக்கத்து கா.ஃபிர்களிடம் ஏறத்தாழ ஆயிரம் அனுபவசாலி போர் வீரர்கள் கொண்ட படை இருந்தது. அது அக்காலத்தின் புத்தம் புதிய ஆயுதங்களையும் போர்த்தளவாடங்களையும் ஏந்தி வந்திருந்தது. மறுபுறம் முஸ்லிம்களின் எண்ணிக்கை 313 பேரைக் உள்ளடக்கியிருந்தது. அது அவர்களை எதிர்கொள்வதற்காக நின்று கொண்டிருந்தது. இவர்களில் பெரும்பாலான மக்கள் அனுபவமற்றவர்களாக இருந்தார்கள். போர்த்தளவடாங்களும் இல்லாததற்குச் சமமாக இருந்தன. இவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து வந்து 2 ஆண்டுகள்தான் அகியிருந்தன. அவர்களிடம் உணவுப் பொருள்களும் இருக்கவில்லை; தங்குவதற்குமே குறிப்பிட்ட தங்குமிடம் ஏதும் இருக்கவில்லை. அவர்கள் போருக்கான ஆயத்தம் எப்படி செய்வார்கள்? இந்த இரண்டு பக்கத்தின் படைகளும் எதிரெதிரே நின்று கொண்டிருந்தன.

அந்தக் காலத்தில் நடுத்தரமான ஒருவர் இரு பக்கத்தில் உள்ளவர்களையும் ஆய்வு செய்தால், மக்கத்து கா.ஃபிர்களின் படை முஸ்லிம்களை சில நிமிடங்களிலேயே அழித்து நாசமாக்கி விடும் என்ற முடிவுக்கு வரும் நிர்பந்தத்திற்கு ஆளாகி விடுவார். ஏனெனில், இது ஒரு சமநிலையற்ற போட்டியாக இருந்தது. சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் இந்த வெளிப்படையான வலுவின்மையைக் கணித்(து அறிந்)திருந் -தார்கள். எனவே, ஹுஃஸூர் (ஸல்) அவர்கள் துஆக்களை செவியேற்பவனான இறைவனின் வாயிலைத் தட்டியவாறு மிகவும் உருக்கமாக இவ்வாறு பணிவுடன் வேண்டினார்கள்:

اَللّٰهُمَّ اِنَّکَ اِنْ تُهْلِکْ هٰذِهِ الْعِصَابَةَ مِنْ اَهْلِ الْاِسْلَامِ لَا تُعْبَدْ فِی الْاَرْضِ.

பொருள்: அல்லாஹ்வே! முஸ்லிம்களின் இந்தக் கூட்டம் அழிக்கப்பட்டு விட்டால், பிறகு மண்ணில் உன்னை உண்மையாக வணங்கக்கூடியவர் எவரும் இருக்க மாட்டார்.

அல்லாஹ் சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்களின் அழைப்புக்கு செவிமடுத்தான். மேலும், அனுபவம் பெற்றிருந்த போர் வீரர்கள் மீது சொற்ப எண்ணிக்கையிலான முஸ்லிம்களுக்கு மாபெரும் வெற்றியை வழங்கினான். அபூ ஜஹ்ல் உட்பட மக்கத்து கா.்.பிர்களின் 24 தலைவர்கள் கொல்லப்பட்டனர். முஸ்லிம்கள் அவர்களுடைய 70 பேரை சிறைபிடித்தனர்.

துஆக்களை செவியேற்பவனான எந்த இறைவன் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்களின் துஆவை செவியேற்றானோ இன்றும் அவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஊழியர்களின் துஆக்களை செவியேற்கிறான். அவர்களுக்காகவும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான கதவுகளைத் திறக்கிறான்.



தற்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களையும் ஏற்றுக் கொண்டு, எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் அல்லாஹ்வின் இருப்பு உள்ளது. அவனே சிரமங்களை அகற்றுபவனாகவும், தேவைகளை நிறைவேற்றுபவனாகவும் இருக்கிறான் என்பதை உலகிற்குத் தெள்ளத் தெளிவாகக் காட்டி விட்டான். இது தொடர்பாக ஒரு நிகழ்வு எடுத்துரைக்கப்படுகிறது:

எவ்வாறு ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் அபூலஹப் என்பவனும், நெருங்கிய உறவினர்களும் இஸ்லாத்தைப் பரப்புவதற்கான எல்லா வழிகளையும் அடைப்பதற்கு முயற்சி செய்தார்களோ அதே போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தந்தையின் சகோதரர் வழி சகோதரர்களும் அஹ்மதிய்யத்தின் தப்லீகைத் தடுக்கக்கூடிய எல்லாத் தடைகளையும் ஏற்படுத்த முயற்சி செய்தனர். ஜனவரி 5, 1900 இல் மிர்ஸா இமாமுத்தீன் மற்றும் நிஸாமுத்தீன் ஆகியோர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாருடைய சஹாபா பெருமக்களுக்குத் துன்பம் கொடுப்பதற்காக முபாரக் பள்ளிவாசலுக்குக் கீழ்ப்பக்கமாக அக்ஸாவை நோக்கி செல்லும் வழியில் சுவர் எழுப்பி வழியை அடைத்து விட்டனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மாவட்ட அரசு அதிகாரிகளையும், குர்தாஸ்பூரின் துணை ஆணையரையும் தொடர்பு கொண்டு இந்தச் சுவரை அகற்ற முயற்சி செய்தார்கள். ஆனால், அவர்களது அணுகுமுறை முற்றிலும் எதிர்ப்பானதாக, இன்னும் சொல்வதாயின், அடக்குமுறையாக இருந்தது.

கடைசியில், ஹுஃஸுஃர் (அலை) அவர்கள் குர்தாஸ்பூரின் மாவட்ட நீதிபதியின் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்தார்கள். ஆனால், அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதும், ஆரம்பக் கட்டத்தில் நம்பிக்கை பொங்கும் எந்த சூழலும் தென்படவில்லை. இந்த ஆபத்தான சூழ்நிலையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆக்களை செவியேற்பவனின் கதவைத் தட்டினார்கள். அப்பொழுது மேலான அல்லாஹ் ஹுஃஸுஃர் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக இந்த நற்செய்தியை வழங்கினான்:

اَلرَّحٰی۔ تَدُوْرُ وَیَنْزِلُ الْقَضَاءُ۔اِنَّ فَضْلَ اللّٰہِ لَاٰتٍ وَلَیْسَ لِاَحَدٍ اَنْ یُّرُدَّ مَا اَتٰی۔

அதாவது, ஆட்டுரல் சுற்றும். இறை நியதி இறங்கும். அதாவது, வழக்கின் நிலை மாறிவிடும். இது இறைவனின் வாக்குறுதியாகும். எதைக் குறித்து வாக்குறுதி அளிக்கப் -பட்டதோ அது கண்டிப்பாக வந்தே தீரும். அதை மறுப்பதற்கு எவருக்கும் துணிச்சல் இல்லை. (அஹ்மதிய்யத்தின் வரலாறு தொகுதி 2, பக்கம் 73)

துஆக்களை செவியேற்பவனான இறைவன் புறமிருந்து நற்செய்தி கிடைத்த பிறகு நீதிபதி தனது எதிர்ப்புத் தோரணை இருந்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு கூறினார். மேலும், சுவரை இடிக்க ஆணையிட்டார். மிர்ஸா இமாமுத்தீன் மீது வழக்கு செலவுகள் போக, கூடுதலாக 100 ரூபாய் தண்டம் விதிக்கவும் செய்தார். மேலும், 12 ஆகஸ்டு 1901 அன்று அந்த சுவரைக் கட்டிய அதே கைகள் அந்த சுவரை இடித்து தரைமட்டமாக்கின.

எவ்வாறு சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் ரஹ்மத்துல்லில் ஆலமீனாக (அகில உலகங்களுக்கும் அருட்கொடையாக) இருந்தார்களோ, அவ்வாறே ஹுஃஸுஃர் (ஸல்) அவர்களின் இரண்டாம் வருகையின் வெளிப்பாடான சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கருணையின் மொத்த உருவமாகத் திகழ்ந்தார்கள். ஹுஃஸுஃர் (அலை) அவர்கள் தம்முடைய இந்தக் கடுமையான எதிரிகளின் இழப்பீட்டுத் தொகையை மன்னித்து விட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எதிர்த்ததன் காரணமாக இந்தக் குடும்பத்திற்கு முடிவுரா இன்னல்களின் ஒரு தொடர் ஆரம்பமாகி விட்டது. அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வ.்.பாத்துக்குப் பிறகும் தொடர்ந்தது. எனவே, இந்த இன்னல்களால் நொந்து போய் அவற்றிலிருந்து தப்பிப்பதற்காக மிர்ஸா நிஸாமுத்தீன் ஹஸ்ரத் முதல் கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இல்லத்திற்கு வந்தார். மேலும், வாயிலில் தலையை வைத்து தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார். மேலும், 'மவ்லவி சாஹிப் அவர்களே! எங்களது இன்னலுக்கு சிகிச்சை ஏதும் இல்லையா?' எனக் கேட்டார். அதற்கு பதில்கூறியவாறு ஹஸ்ரத் முதல் கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், 'மிர்ஸா சாஹிப், இறைநியதியை என்னால் எப்படி மாற்ற முடியும்?' என்று கேட்டார்கள். (சீரத்துல் மஹ்தி தொகுதி 3, பக்கம் 654 அறிவிப்பு எண் 720)

இந்த நிகழ்வை ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பதன் மூலம், அஹ்மதிய்யத்தின் எதிரிகள் மற்றும் அஹ்மதிய்யத்தின்

பகைவர்களுக்கு இதில் ஒரு வகையில் இப்படியான ஓர் எச்சரிகையும் அச்சுறுத்தலும் இருப்பதாகத் தெரிகிறது. அதாவது, அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் மற்றும் தப்லீகின் வழிகளில் தடைகளை எழுப்புகின்ற அஹ்மதிய்யத்தின் பகைவர்கள் நினைவில் கொள்ளட்டும்!

விரைவாகவோ, தாமதமாகவோ اَلرَّحٰی۔ تَدُوْرُ وَيَنْزِلُ الْقَضَاءُ அதாவது, துஆக்களை செவியேற்பவனான இறைவனின் ஆட்டுரல் சுற்றும். எதிரிகள் மீது இறைநியதி இறங்கும்.

அப்பொழுது இந்தத் தடைகளை எழுப்புகின்ற எதிரிகள் கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் வாயிலில் தலையை வைத்து, 'எங்களுடைய இன்னல்களுக்கு சிகிச்சை எதுவும் இல்லையா?' என்று கேட்பார்கள். அப்பொழுது காலத்தின் கலீ∴பா அவர்கள் தமது தீர்வைக் கூறுவார்கள்.


அஹ்மதிய்யா ஜமாஅத் அஹ்மதிய்யத்தின் எதிரிகளிடம் அறிவுரையாக இவ்வாறு கூறுகிறது: எந்த இறைவன் கடந்த காலத்தில் தடைகளை எழுப்பியவர்களுக்குப் பாடம் கற்பிற்கும் தண்டனையை வழங்கினானோ அதே துஆக்களை செவியேற்பவனான இறைவன் நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் தண்டனை அளிப்பதற்கான ஆற்றல் பெற்றிருக்கிறான். எனவே, ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுஅல்லாஹ்) அவர்களின் அறிவுரைகளைக் கேளுங்கள். மேலும், தவ்பா செய்வதாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விடுங்கள். وما علينا الا البلاغ (தூதுச் செய்தியை எட்ட வைப்பதைத் தவிர எம் மீது வேறு எந்தப் பொறுப்பும் இல்லை.)

காதியானிலிருந்து ஏறத்தாழ 70 கி.மீ. தொலைவில் கபூர்தலா என்ற ஒரு நகரம் உள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் இங்கு ஒரு கலப்பற்ற ஜமாஅத் இருந்தது. முன்ஷீ ஹபீபுர் ரஹ்மான் சாஹிப் (ரலி) அவர்களின் குடும்ப பள்ளிவாசல் ஒன்று இருந்தது. அது அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அஹ்மதி மக்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. அவர்களே அதில் தொழுவார்கள். இங்கேயே ஜமாஅத் நிகழ்ச்சிகள் நடந்து வந்தன.

இந்தப் பள்ளிவாசல் அஹ்மதி அல்லாத முஸ்லிம்களுக்குக் கிடைக்க வேண்டும் என அஹ்மதிய்யத்தின் எதிரிகள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விட்டார்கள். இந்த வழக்கு பல்வேறு நீதிமன்றங்களையும் வாய்தாக்களையும் கடந்து வந்தவாறு தனது இறுதி கட்டத்தை எட்டியது. அப்பொழுது தீர்ப்பு வழங்கும் நீதிபதியும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கடுமையான எதிரி என்பது அஹ்மதி மக்களுக்குத் தெரிய வந்தது. அவர் நீதிமன்றத்தில் வாசித்துக் காட்டப் போகின்ற அந்தத் தீர்ப்பை அஹ்மதிய்யா ஜமாஅத்துக்கு எதிராகத் தீர்ப்பு எழுதி விட்டார்.

இந்த நிலையில், கபூர்தலா ஜமாஅத் பதற்றமடைந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கடிதங்கள் எழுதியது. துஆவிற்காக விண்ணப்பித்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களுக்கு, "நான் உண்மையாளன் என்றால், பள்ளிவாசல் உங்களுக்குக் கிடைத்து விடும்" என்று கடிதம் எழுதினார்கள். ஆனால், நீதிபதி வழக்கப்படி எதிர்ப்பு அணுகுமுறையை நிலைநாட்டினார். கடைசியில் அஹ்மதிகளுக்கு எதிராக தீர்ப்பு எழுதி விட்டார்.

தீர்ப்பு கூற இருந்த அன்று காலை வேளையில் ஆடை அணிந்து கொண்டு தனது கோட்டை வீட்டின் வராண்டாவுக்கு வந்தார். தன் பணியாளரிடம் பூட் அணிவிக்குமாறு கூறிவிட்டு இவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். பணியாளர் பூட் அணிவித்து லேஸ் கட்டி விட ஆரம்பித்த போது, திடீரென்று அவருக்கு ஏதோ சப்தம் கேட்க, அவர் நிமிர்ந்து




மேல பார்த்தால் நீதிபதி நாற்காலியில் விழுந்து கிடந்தார். அவர் கை வைத்து பார்த்தபோது, இவர் இறந்து கிடந்தது தெரிய வந்தது. ஆக, ஒரேயடியாக இதயத் துடிப்பு நின்றுபோய் உயிர் போய் விட்டது. அதற்குப் பிறகு, அந்த நீதிபதியின் இடத்தில் ஒரு ஹிந்து நீதிபதி நியமிக்கப்பட்டார். அவர் புதிததாக விசாரணை நடத்தி முந்தைய நீதிபதியின் தீர்ப்பை விட்டுவிட்டு அஹ்மதிகளுக்கு சாதகமாகத் தீர்ப்பு கூறினார். (சீரத்துல் மஹ்தி தொகுதி 1, பக்கம் 57 அறிவிப்பு எண் 79)

ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்! தீர்ப்பை மாற்ற வைப்பது எந்த அஹ்மதியின் கட்டுப்பாட்டிலும் இருக்கவில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையை நிரூபிப்பதற்காகவும், பள்ளிவாசல் அஹ்மதிகளுக்குக் கிடைப்பதற்காகவும், எதிராகத் தீர்ப்பு எழுதிய நீதிபதியை இல்லாமல் அழித்து ஒழித்து விடுவது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் ஆதிக்கத்தில் மட்டுமே இருந்தது. துஆக்களை செவியேற்பவனான இறைவன் தற்காலத்தில் தன்னுடைய நல்லடியார்களின் துஆக்களை ஏற்றுக் கொண்டு தனது இருப்பிற்கான சான்றை அளிக்கிறான் என்பதைத் தனது செயல் ரீதியான சாட்சியின் மூலம் நிரூபித்து விட்டான்.

(தொடரும்...)

# அல்லாஹ்வை அறிந்து கொள்ளுங்கள்!



முதப்பிர் தீன், முரப்பி, யு.கே.

தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்

வாசகருக்கு ஒரு குறிப்பு: இந்த நேர்காணலை வாசிப்பதற்கு முன்பு முக்கியமாக இரண்டு விஷயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக, இறைவனின் நடைமுறையின் படியே அவன் சில சமயங்களில் தன்னைப் படர்க்கையில் கூறுகின்றான். உதாரணமாக, 'அவன்', 'அவனுடைய' என்ற சொற்களைத் தன்னைக் குறித்துக் கூறுகின்றான். திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறே தன்னைப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளான். இந்த நடைமுறையை மேற்கொள்வது அவனது பெருமையையும் அவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் பெற்றவன் என்பதையும் சுட்டிக் காட்டுவதற்காக இருக்கின்றது. இரண்டாவது விஷயம், இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் இறைவனின் சொந்த வார்த்தைகளே ஆகும். அதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. திருக்குர்ஆனில் இறைவனின் வார்த்தைகள் என்ன உள்ளதோ அவற்றை அப்படியே பயன்படுத்தப்பட்டுள்ளது.



தங்களது பெயர் என்ன?

நிச்சயமாக நானே அல்லாஹ். என்னை அன்றி வேறு எவரும் வணக்கத்திற்குரியவர் இல்லை. (திருக்குர்ஆன் 20:15)

தங்களுக்கு வேறு பெயர்களும் உண்டா?

அழகிய நற்பண்புகள் எல்லாம் அல்லாஹ்வுக்கே உரியன. எனவே நீங்கள் அவற்றைக் கொண்டு அவனிடம் வேண்டுங்கள். (7:181)

புகழுக்கும் கண்ணியத்திற்கும் உரிய உன் இறைவனின் பெயர் மிக்க அருளுக்குரியதாகும் (55:79)

தங்களது வயது எத்தனை?

அவன் முதலானவனும் இறுதியானவனும் ஆவான் (57:4)

நாங்கள் ஏன் தங்களைப் பார்க்க முடிவதில்லை? நாங்கள் தங்களைக் குறித்தும் தங்களது பண்புகளைக் குறித்தும் நிறைய கேள்விப்படுகின்றோம். இருப்பினும் எங்களது பௌதிகக் கண்களால் தங்களைப் பார்க்க முடியவில்லையே?

பார்வைகள் அவனை அடைய முடியாது. ஆனால் அவன் பார்வைகளை அடைகிறான். அவன் நுட்பமானவனும் யாவற்றையும் அறிந்தவனும் ஆவான். (6:104)

ஆக நாங்கள் தங்களைப் பார்க்க முடியாது எனில் குறைந்த -பட்சம் தாங்கள் கூறுவதைக் கேட்கவாவது முடியுமா?

வஹீ மூலம் அல்லது திரைக்குப் பின்னால் இருந்து அல்லது தன் கட்டளையினால், தான் விரும்புவதை எடுத்துரைப்பதற்கு வானவர்களுள் ஒரு தூதரை, தான் அனுப்புவதன் மூலமே அன்றி அல்லாஹ்வுடன் பேசுவதற்கான தகுதியைப் பெற்ற எந்த மனிதரும் கிடையாது. நிச்சயமாக அவன் உயர்ந்தவனும் நுட்பமான ஞானமுள்ளவனும் ஆவான். (42:52 )

நாங்கள் தங்களிடம் பேச விரும்பினால் அதனை எவ்வாறு செய்வது?

நீங்கள் என்னிடம் வேண்டுங்கள். நான் உங்கள் வேண்டுதலுக்கு பதில் அளிப்பேன். (40:61)

சரி, தங்களைப் பற்றி மேலும் சிலவற்றைக் கூறுங்கள். தயவு செய்து தாங்கள் எங்கு வாழ்கின்றீர்கள் என்பதை குறிப்பிடுங்கள்?

அரியணையில் உறுதியாக நிலை கொண்ட அவன் அளவற்ற அருளாளன் ஆவான். (20:6)

அரியணை! அந்த அரியணை எங்கு உள்ளது? அதில் தான் தாங்கள் வாழ்கின்றீர்களா?

அல்லாஹ் வானங்கள் பூமி ஆகியவற்றின் ஒளியாக விளங்குகின்றான். (24:36)

இது எங்களது வாசகர்களுக்கு குழப்பம் தருவதாக இருக்கும். நீங்கள் எவ்வாறு அரியணையிலும் மற்ற எல்லா இடத்திலும் இருக்க முடிகின்றது?

ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் அவன் தன்னை வெவ்வேறான தோற்றத்தில் வெளிப்படுத்துகின்றான். (55:30)

நாங்கள் தங்களை எவ்வாறு அடைய முடியும்?

என் அடியார்கள் உன்னிடம் என்னைப் பற்றி கேட்டால் நான் அவர்களுக்கு அருகில் இருக்கின்றேன். பிரார்த்தனை செய்கின்றவர் என்னை அழைக்கின்றபோது நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். (2:187)

நாங்கள் தங்களை இதற்குப் பிறகும் காண முடியவில்லை என்றால் என்ன செய்வது?

மேலும் எவர்கள் நம்மை சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம் நம் வழிகளில் நடத்துவோம். மேலும் நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான் (29:70)

தங்களது குடும்பத்தைப் பற்றி சற்று கூறுங்கள். உங்கள் பெற்றோர்கள் யாவர்? தங்களுக்கு மனைவி உண்டா? தங்களுக்கு குழந்தைகள் உண்டா?

அவன் எவரையும் பெறவில்லை அவன் எவராலும் பெறப்படவும் இல்லை (112:3,4)

அவன் தனக்காக மனைவியையோ மகனையோ எடுத்துக் கொள்ளவில்லை (72:4)

தங்களது பணி என்ன? அல்லது தங்களது அன்றாட வேலைதான் என்ன?

வானங்கள் பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது மேலும் அல்லாஹ் எல்லாவற்றிற்கும் முழுமையான ஆற்றல் பெற்றவன் ஆவான் (3:190)

அவன் எல்லாவற்றையும் நிர்வகிக்கின்றான். (13:3)

எல்லா செயல்களும் என்றால் அனைத்துமே அடங்கும்! தங்களால் எவ்வாறு இதனை செய்ய முடிகின்றது தாங்கள் களைப்படைவது இல்லையா தங்களுக்கு ஓய்வு நேரம் எது?

சிற்றுறக்கமும் உறக்கமும் அவனைப் பற்றுவதில்லை. அவனுடைய ஞானம் வானங்களிலும் பூமியிலும் பரவி இருக்கின்றது அவற்றைப் பாதுகாப்பது அவனை சோர்வுக்கு உள்ளாக்குவதில்லை. (2:286)

தாங்கள் எங்களுக்கு, தங்களது படைப்பிற்கு என்ன செய்துள்ளீர்கள்?

அல்லாஹ்வே உங்களுக்கு இரவை நீங்கள் அதில் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகவும் பகலைப் பார்ப்பதற்காக -வும் ஆக்கினான் நிச்சயமாக அல்லாஹ் மக்களுக்குப் பேரருள் செய்பவன் ஆவான் (40:62)

அல்லாஹ்வே உங்களுக்கு உங்களுக்காக பூமியைத் தங்குமிடமாகவும் வானத்தை மேற்கூரையாகவும் படைத்து உங்களை வடிவமைத்தான் பின்னர் உங்கள் உருவங்களை அழகாக அமைத்தான் மேலும் உங்களுக்குத் தூய்மையான உணவினை வழங்கினான் (40:65)

அல்லாஹ்வே வானங்களையும் பூமியையும் படைத்து மேகங்களிலிருந்து நீரை இறக்கி அதன் மூலம் உங்களுக்கு பழங்களி(ன் வகையி)லிருந்து உணவைப் படைத்தான். கப்பல்கள் அவனுடைய கட்டளையினால் கடலில் செல்ல வேண்டும் என்பதற்காக அவன் அவற்றை(ச் செலுத்தக்கூடிய காற்றை)க் கூலியின்றி உங்களுக்குத் தொண்டு செய்ய வைத்தான். (இவ்வாறு) அவன் ஆறுகளை(யும்) ஊதியமின்றி உங்களுக்குத் தொண்டு செய்ய வைத்தான். (14:33)

நாம் பூமியைப் படுக்கையாக ஆக்கவில்லையா?

மலைகளை முளைகளாகவும் ஆக்கவில்லையா?

மேலும் நாம் உங்களை இணைகளாகப் படைத்துள்ளோம்.

மேலும் உங்கள் தூக்கத்தை நாம் ஓய்வுக்குரியதாக ஆக்கி -யுள்ளோம்.

மேலும் இரவை நாம் ஒரு போர்வையாக ஆக்கியுள்ளோம்.

மேலும் பகலை நாம் வாழ்வின் செயல்பாட்டிற்குரியதாக ஆக்கியுள்ளோம்.



மேலும் வலிமை வாய்ந்த (வானங்கள்) ஏழை உங்களுக்கு மேல் நாம் அமைத்தோம்.

மேலும் நாம் சூரியனை ஒளிமயமான ஒரு விளக்காக ஆக்கி -யுள்ளோம்.

மேலும் கொட்டும் மேகங்களில் இருந்து மிகுதியாக பொழிந்து கொண்டிருக்கும் தண்ணீரை நாம் இறக்குகின்றோம். அதனைக் கொண்டு தானியத்தையும் தாவர வகையையும் செழித் -தோங்கி வளரும் தோட்டங்களையும் நாம் வெளிப்படுத்து -கின்றோம். (78:7-16)

இதற்கு மேலும் தாங்கள் வேறு என்ன எங்களுக்காக செய்துள்ளீர்கள்?

நீங்கள் அவனிடம் கெஞ்சி கேட்டவற்றையெல்லாம் அவன் உங்களுக்கு வழங்கினான். நீங்கள் அல்லாஹ்வின் அருள்களை எண்ணத் தொடங்கினால் அவற்றை உங்களால் கணக்கிட முடியாது. நிச்சயமாக மனிதன் மிக்க அநீதி இழைப்பவனும் மிக்க நன்றி கெட்டவனும் ஆவான். (14:35)

இதற்காக நீங்கள் எங்களிடம் எதுவும் பரிகாரமாக கேட்கின்றீர்களா?

நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். நான் அவர்களிடம்

வாழ்க்கைக்குத் தேவையான எதையும் நாடுவதில்லை. அவர்கள் எனக்கு உணவளிக்க வேண்டும் என்றும் நான் நாடுவதில்லை (51:57-58)

துரதிஷ்டவசமாக சில மக்கள் தங்களை நம்புவதில்லை. அவர்கள் தங்களது இருப்பையே மறுக்கின்றனர். அதற்காக அவர்கள் கூறுகின்ற ஒரு காரணம், இறைவன் இருந்தால் எந்த ஒரு துன்பமும் உலகில் இருக்காது என்பதாகும். நாங்கள் இத்தகையவர்களிடம் என்ன கூற வேண்டும்?

ஓரளவு பயத்தாலும் பசியாலும் செல்வங்கள், உயிர்கள், கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களை சோதிப்போம். மேலும் நீர் பொறுமையாளர்களுக்கு நற்செய்தியை கூறுவீராக. அவர்கள் தங்களுக்குத் துன்பம் ஏற்படும்போது பதற்றம் அடைவதில்லை. மாறாக நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். மேலும் நாம் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் எனக் கூறுவர். இவர்கள் மீதே தங்களின் இறைவனிடமிருந்து அருள்களும் கருணையும் இறங்குகின்றன. இவர்களே நேர்வழி பெற்றவர்கள். (2:156-158)

எங்களது வாசகர்களில் எவராவது கஷ்டத்தில் இருந்தால் அல்லது ஏதாவது ஒரு துன்பத்தை கடந்து செல்பவர்கள் இருந்தால் அவர்களுக்காக உங்களுடைய தூதுச் செய்தி என்ன?

நிச்சயமாக ஒவ்வொரு கஷ்டத்துடனும் சுகம் உண்டு. (94:6)

உலகத்தில் எத்தனையோ மார்க்கங்கள் இருக்கின்றன. நாம் அவற்றுள் எது சரியான மார்க்கம் என்பதை எப்படிஅறிந்து கொள்வது?

நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உண்மையான மார்க்கம் இஸ்லாம் ஆகும். (3:20)

சரி, நான் புரிந்து கொண்டேன். முழுமையான கட்டுப்படுதல். பிறகு தங்களுடைய முதல் கட்டளை எது ?

மக்களே நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களுடைய இறைவனை மட்டும் வணங்குங்கள் அதனால் நீங்கள் எல்லாவித ஆபத்துகளில் இருந்தும் தப்பித்துக் கொள்ளலாம். (2:22)

இவை எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உள்ளதா? இந்த உலகம் எவ்வாறு முடிவு பெறும்?

பூமியாகிய இதன் மீது உள்ளவை எல்லாம் அழியக் கூடியவையே புகழுக்கும் கண்ணியத்திற்கும் உரிய உன் இறைவனின் கவனம் எவர் மீது இருக்கிறதோ அவரே எஞ்சி இருக்கிறார். (55:28)

எங்களது வாசகர்களுக்காக தங்களது இறுதி தூதுச் செய்தி என்ன?

உங்களுள் எவர் சிறந்த செயல்களை உடையவர் என்பதை சோதிப்பதற்காக அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்துள்ளான். மேலும் அவன் வல்லமை மிக்கவனும் மிக்க மன்னிப்பவனும் ஆவான். (67:3)



# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் படைப்பினங்கள் மீதிருந்த அனுதாபம்

ஃபரீத் அஹ்மத் நவீத் ஸாஹிப்
(Principal, Jamia Ahmadiyya International, Ghana)

தமிழாக்கம்: இப்னு வஸீம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

எதிரிகளின் ஏளனத்தையும் பரிகாசத்தையும் பொருட்படுத்தாமல், தமது உண்மைக்காக வெளிப்படக்கூடிய ஓர் அடையாளத்திலும், அல்லாஹ்விடம் மனிதகுலத்திற்காக நன்மைக்கான வழிவகையைக் கேட்கக்கூடிய நபர் யார்தான் நமக்கு உலகில் தென்படுகிறார்? ஆனால், இல்லை! இஸ்லாத்தின் வரலாற்றில் அன்னாருடைய மற்றும் நம்முடைய எஜமானரும் தலைவரும் ஆன ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் மனிதர்களுடன் அன்பு செலுத்தக்கூடிய இத்தகைய நிகழ்வுகள்தானே பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படித்து மனிதன் வியப்பில் மூழ்கி விடுகிறான். தாயி.ஃ.பின் சம்பவம் மனிதகுலத்துடன் இதே அனுதாபத்திற்கான ஓர் எடுத்துக்காட்டு இல்லையா? அப்பொழுது ஹுஃஸுூர் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவுக்கு கற்கள் வீசப்பட்டன என்றால், ஹுஃஸுூர் (ஸல்) அவர்களின் முழு உடலும் இரத்தத்தில் நனைந்து விட்டது. (சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 182)

ஆனால், அந்த அநீதியிழைக்கக்கூடிய சமுதாயத்திற்குத் தண்டனை அளிப்பதற்காக அல்லாஹ் ஒரு வானவரை அன்னாரிடம் அனுப்பினான். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இல்லை, நான் அவர்களது அழிவை விரும்பவில்லை. அல்லாஹ் அந்த மக்களிலேயே இறைவனை வணங்குபவர்களை உருவாக்கி விடுவான் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. (சஹீஹ் புகாரி ஹதீஸ் எண் 3231)

நாம் அனைவரும் அறிவோம்! பிறகு கடைசியில் அவ்வாறே நிகழ்ந்தது. தாயி.ஃ.பில் வாழ்ந்து வந்த பனூ ஸகீ.ஃ.ப் கோத்திரத்தினரும், நேற்று வரை தாங்கள் கற்கள் வீசி வந்த அந்தத் தூய நபியின் அடிமைத்துவத்தின் கீழ் வந்து விட்டார்கள். நேற்று வரை அவர்கள் எவருடைய உயிருக்குப் பகைவர்களாக இருந்தார்களோ, அவருக்காகவே உயிர்களை அர்ப்பணிக்கக்கூடிய தோழர்கள் ஆகி விட்டார்கள். இவை மனிதகுலத்துடன் உண்மையான அன்புக்கான அந்த மகத்துவமிக்க வரலாற்றுக் கதைகளாகும். இவை மறக்கக்கூடிய கதைகள் அல்ல. அதில் இன்றும் ஒவ்வொரு மனிதனுக்கும் மிகப் பெரும் பாடம் உள்ளது.

ஆரிய சமுதாயத்திலிருந்து இஸ்லாத்தின் ஒரு மிகப் பெரும் எதிரி பண்டிட் லேக்ராம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப அழிந்த போது, அன்னார் கூறினார்கள்: இப்பொழுது நமது உள்ளத்தின் நிலை விநோதமானது. வேதனையும் உள்ளது; மகிழ்ச்சியும் உள்ளது. வேதனை எதனால் என்றால், ஒருவேளை லேக்ராம் திருந்தியிருந்தான் என்றால், அதிகம் வேண்டாம், அவன் தீய பேச்சுக்களிலிருந்து மட்டுமாவது விலகியிருந்தான் என்றால், நான் அவனுக்காக துஆ செய்திருப்பேன் என்று அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். அவன் துண்டு துண்டாக ஆக்கப்பட்டிருந்தாலும் அப்பொழுதும் உயிர்ப்பிக்கப்பட்டிருப்பான் என்று நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். (சிராஜே முனீர், ரூஹானி கஸாயின் தொகுதி 12, பக்கம் 28)


இதுதான் உண்மையான இஸ்லாத்தின் அனுதாபமான போதனை. இது இந்தக் காலத்துக்கு எல்லாவற்றையும் விட அதிகம் தேவைப்படக்கூடிய அதே போதனை இல்லையா? ஏனெனில், இன்றோ மனிதனின் நிலை எப்படி ஆகி விட்டது என்றால், தனது எதிரியின் ஒரு தாக்குதலுக்கு பதிலில் பிணக்குவியல்கள் குவிக்கப்படுகின்றன. ஒரு கொலைக்கு பதிலாக ஆயிரக்கணக்கான குற்றமற்ற மனிதர்கள் கொல்லப்படுகிறார்கள். எதிரிகளாகத் தென்படக்கூடிய இவர்களும்கூட நம்மைப் போன்ற மனிதர்களாகத்தானே இருப்பார்கள் அவர்களுக்கும் மனைவி மக்கள் இருப்பார்களே! குடும்பம் இருக்குமே! இவர்கள் சென்று விடுவதனாலும் பல உள்ளங்களும் வீடுகளும் பாழடைந்து போய் விடுமே! சில விஷயங்களில் கருத்து வேறுபாடு இருந்தும் எந்த இறைவனுக்கு நாம் அடியார்களாக இருக்கிறோமோ இவர்களும் அந்த இறைவனின் அடியார்கள்தானே என்று எவரும் நினைப்பதில்லை.

இந்தப் போதனையை நினைவூட்டுவதற்காகவே அல்லாஹ் இந்தக் காலகட்டத்தில் தூய மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை அனுப்பினான். அவரைப் பற்றி எதிரிகள் தொண்டையைக் கிழித்து கிழித்து, 'எங்களுக்கு எந்தவொரு மஸீஹ் மற்றும் மஹ்தியின் வருகைக்கான தேவையே என்ன இருக்கிறது?' என்று வெளிப்படுத்துகிறார்கள். தேவை இருந்தது; நிச்சயமாக இருந்தது. தேவை இருக்கிறது; நிச்சயமாக இருக்கிறது. ஏனெனில், காலம் கூவி கூவி இவ்வாறு அறிவிப்பு செய்கிறது, காலம் கத்தி கத்தி இவ்வாறு சாட்சி பகர்கிறது. மேலும், இவ்வாறு சத்தியம் செய்கிறது:

மனிதனை உண்மையான மனிதனாக ஆக்குவதற்காக, நம் எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் போதனையை சுரய்யா நட்சத்திரத்திலிருந்து திருப்பிக் கொண்டு வருவதற்காக இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்ட ஒருவரின் தேவை இருந்தது; இருக்கிறது. அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வடிவில் இந்த உலகத்துக்குத் தனது அருளை எட்ட வைப்பதற்காக இந்தப் பின்னவர்களின் காலத்திலும் வெளிபட்டு விட்டது. அன்னாரைப் பின்பற்றி நிறுவபட்ட அஹ்மதிய்யா கிலா.ஃ.பத் இன்று உலகம் முழுவதிலும் இந்தப் போதனையின் ஒளியைப் பரப்புவதற்காகவே முயற்சி செய்து கொண்டிருக்கிறது. கியாமத் வரை இந்தக் கதவு வழியாக நுழைந்தே மனிதம்

தனது இழந்து போன மகத்துவங்களைப் பசுமையாக்க முடியும். இல்லையெனில், சில மனிதர்களோ ஒருவேளை வெற்றி பெற்றும் விடலாம். ஆனால், மனிதம் எப்பொழுதும் தோல்வியடைந்து கொண்டே செல்லும்.

காதியானில் ஜமாஅத்தின் ஒரு கடுமையான எதிரி நிஹால் சிங் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் சில அஹ்மதிகள் மீது வழக்குகளும் தொடுத்து வைத்திருந்தான். ஒரு நாள் அவன் வீட்டின் ஒரு நோயாளி பெண்ணுக்குத் தீடிரென்று கஸ்தூரி நறுமணம் தேவை பட்டது. அது மிகவும் விலையுயர்ந்ததாக இருந்ததோடு அப்பொழுது அரிதாகவும் இருந்தது. வேறு வழியின்றி, அவன் அந்த நிலையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கதவுக்கு வந்து விட்டான். தாழ்ந்த பார்வையுடன் கஸ்தூரி தருமாறு கேட்டான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவனது கோரிக்கையைக் கேட்டவுடனேயே உடனடியாக உள்ளே சென்றார்கள். பாதி தோலா (6 கிராம்) அளவுக்கு கஸ்தூரியைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்து விட்டார்கள். (ஹஸ்ரத் ய.்.கூப் அலீ சாஹிப் இர்.்.பானீ (ரலி) அவர்கள் இயற்றிய சீரத் மஸீஹ் மவ்வூத்பக்கம்306)



(லக்ஷ்மன் தாஸ் எனும்) ஒரு ஹிந்து பண்டிட் ஹுஸுர் (அலை) அவர்களிடம் சென்று, 'மிர்ஸா சாஹிப் அவர்களே! மக்கள் ஒரு பக்கமோ தங்களிடமிருந்து பலன் பெறுகிறார்கள். மறுபுறம் சந்தைக்கு செல்லும் போது, தங்களைப் பழித்துக் கூறவும் செய்கி-றார்கள்' என்று கூறினார். அதற்கு பதில் அளித்தவாறு, ஹுஸுர் (அலை) அவர்கள் கூறினார்கள்: பண்டிட் சாஹிப்! நமக்கான எடுத்துக்காட்டு இலந்தைப் பழத்தைப் போன்றது. மக்கள் வந்து அதைக் கல்லும் எறிவார்கள்; இலந்தைப் பழமும் எடுத்துச் செல்வார்கள்.

இந்த உயர் நல்லொழுக்கமும் கூட அந்த முழுமையான நபியால் கற்றுக் கொடுக்கப்பட்டது தான். அந்த நபி (ஸல்) அவர்களை ஒருமுறை ஒரு காட்டரபி கழுத்தில் துணியைப் போட்டு வேகமாக இழுத்தான். மேலும், 'முஹம்மதே! (ஸல்) அல்லாஹ்வின் செல்வத்திலிருந்து எனது உரிமையை எனக்கு வழங்கிடுவீராக!' என்று கூறினான். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள், 'அது சரிதான்! ஆனால், நீ எனக்கு இழைத்த இந்தத் துன்பத்துக்கு உன்னிடம் பழிவாங்கப்படும்தான்' என்று கூறினார்கள். அதற்கு அந்தக் காட்டரபி செய்வதறியாது, 'ஒருபோதும் பழிவாங்கப்பட மாட்டாது. ஏனென்றால், தாங்கள் தீமைக்கு எப்பொழுதும் நன்மையைக் கொண்டே பதில் அளிப்பீர்கள்' என்பது எனக்குத் தெரியும் என்று கூறினான். பெருமானார் (ஸல்) அவர்கள் புன்சிரித்து விட்டார்கள். அவனுக்கு கோதுமையும் பேரீத்தம் பழமும் ஏற்றப்பட்ட இரண்டு ஒட்டகங்களை வழங்கி விட்டார்கள். அவற்றை எடுத்துக் கொண்டு அவன் மகிழ்ச்சியாகத் தன் வீட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டான். (அஷ்.்.பஆஉ, பித.்.ரீ.்.பி ஹுகூக்குல் முஸ்த.்.பா காஸீ அயாஸ், பக்கம் 140, ஆதாரம் பைஹக்கீ)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஏறத்தாழ 25, 30 வயது இருந்தது. அப்பொழுது அன்னாரின் தந்தையாருக்கு சில பங்குதாரர்களுடன் மரம் வெட்டுவதில் மோதல் ஏற்பட்டு விட்டது. விவகாரம் நீதிமன்றம் வரை சென்று விட்டது. (தந்தையார்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை வழக்கைப் பின்தொடர குர்தாஸ்பூருக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஹுஸுர் (அலை) அவர்களின் நன்மை மற்றும் இறையச்சத்தைப் பற்றி அறிந்திருந்த எதிர் தரப்பினர் நீதிமன்றத்தில் நீதிபதியிடம், 'நீங்கள் இந்த விவகாரம் பற்றி மிர்ஸா சாஹிப் அவர்களிடமே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். நீதிபதி கேட்டபோது ஹுஸுர் (அலை) அவர்கள், 'எனது பார்வையில் மரங்கள் வயல்களைப் போன்றவை ஆகும். எவ்வாறு வயலில் நமது பங்கு அனைவருக்கும் பொதுவாக உள்ளதோ அவ்வாறே மரங்களிலும் பொதுவாக உள்ளது' என்று கூறினார்கள். இதனால் மேஜிஸ்ட்ரேட் எதிர் தரப்புக்கு சாதகமாக தீர்ப்பு கூறி விட்டார். (சீரத்துல் மஹ்தி தொகுதி 1, அறிவிப்பு எண் 975)

இந்த சம்பவத்தைக் கேட்டு அன்னாரின் தந்தையார் சற்று கோபமும் அடைந்தார்கள். ஆனால், அன்னார் இந்தக் கோபத்தையோ பொறுத்துக் கொண்டார்கள்தான். ஆனால், மனித அனுதாபத்தின் அம்சத்தை கை நழுவவிடவில்லை. இன்றைய காலத்தில் சில சாதாரண பலன்களுக்காக மனித உரிமைகளைப் பறிப்பதற்கே அமைதி-யின் மீட்சி என்று பெயர் வைத்து சிற்றூர்களும் நகரங்களும் அழிக்கப்-படுகின்றன. (உறுதியற்ற) வீடுகள் இடிக்கப்படுகின்றன. உடைந்த மனங்கள் இன்னும் உடைக்கப்படுகின்றன. கண்ணீர் சிந்தக்கூடிய நிறமும் ஒளியும் அற்ற கண்கள் பாழடைந்து போவதும் இருளடைந்து போவதும் இன்னும் அதிகரித்து விடுகிறது.

இந்தக் காலம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வருவதற்கான காலம் இல்லை என்றால், 'பிறகு அப்படி எந்தவொரு காலமும் ஒருபோதும் வரப்போவதில்லை' என்று நாம் ஏற்க வேண்டி வரும். இந்த வழியைத்தான் இந்தக் காலகட்டத்தில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பல எதிரி ஆலிம்கள் மேற்கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகிக் கொண்டே செல்கிறார்கள். அன்னார் மீதான பகைமையில் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்களின் உண்மையான முன்னறிவிப்பு-களையும் மறுத்துக் கொண்டே செல்கிறார்கள்.

இப்பொழுது சில நாள்களுக்கு முன்பு ஒரு பிரசித்தி பெற்ற முஸ்லிம் அறிஞரின் ஒரு நேர்காணலைப் பார்த்தேன்.

அதில் அவரிடம் முஸ்லிம்களின் உதவி ஆதரவற்ற, இயலாமையினை அகற்றுவதற்கான வழிமுறையைப் பற்றி கேட்கப்பட்டது. ஆனால், நான் வியந்து போனேன்! முஸ்லிம்களின் கம்பீரமான இறந்தகாலத்தைப் பற்றிய கதைகளைக் கூறிய பிறகு அவர், 'இன்று எந்த உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ இது மேற்கத்திய முன்னேற்றமடைந்த சமுதாயங்களால் உருவாக்கப்பட்டுள்ள ஓர் உலகமாகும். இதில் அறிவு மற்றும் நல்லொழுக்க முன்னேற்றம் இன்றி, முஸ்லிம்கள் வெற்றி பெற முடியாது' என்று கூறினார்.

அவருடைய இந்த அரைகுறை உண்மையைக் கேட்டு எனக்கு தொகுப்பாளர் மற்றும் விருந்தினர் ஆகிய இருவர் மீதும் பரிதாபம் ஏற்பட்டது. அதாவது, இந்த அறிவு, செயல், நல்லொழுக்கம் மற்றும் ஈமான் எனும் கருவூலம்தானே முஸ்லிம்களை உலகத்தில் மேலோங்கவும் வெற்றி பெறவும் செய்தது. அதை இந்தப் பின்னவர்களின் காலகட்டத்தில் திரும்ப கொண்டு வருவதற்காக அல்லாஹ் ஒரு மஹ்தி மஸீஹ் (அலை) அவர்களை உலகில் அனுப்புவதாக வாக்குறுதி அளித்திருந்தான். எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அந்த முன்னறிவிப்பை முதுகுக்குப் பின்னால் போட்டு விட்டு, முஸ்லிம்களுக்கு எத்தகைய ஒரு யுக்தியைக் கூறிக் கொண்டிருந்தார் என்றால், அதைப் பெறுவது சிரமம் மட்டுமல்ல. அதையும் தாண்டி, அசாத்தியமானது.

ஹஸ்ரத் அமீருல் மு: மினீன் ஐந்தாவது கலீ:பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானீ (அலை) அவர்கள் மஹ்தி மஸீஹ் ஆக இருக்கிறார்கள் என்ற விஷயத்தை இன்று உலகம் ஏற்றாலும் சரி, ஏற்காவிட்டாலும் சரி! ஆனால், 'உலகத்தை சரியான வழியில் செலுத்தக்கூடிய யாராவது ஒரு சீர்திருத்தவாதி, யாராவது ஒரு மஹ்தி, யாராவது ஒரு மஸீஹ் இந்தக் காலத்தில் இருக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் உரக்கக் சொல்கிறார், கூறிக் கொண்டிருக்கிறார், மேலும், உலகம் சூழ்நிலை மூலமாக இந்தக் கோரிக்கையை முன் வைக்கிறது.

இன்று உலகம் அல்லாஹ்வை வணங்குவதற்கான உண்மையான வடிவத்தை மறந்து விட்டது. உள்ளமானது பல கடவுள்களை மனதில் அமர வைத்துள்ளது. அவற்றை ஒவ்வொருவரும் பூஜிக்கிறார். தன்னைப் படைத்தவனுக்கான உரிமை மறக்கடிக்கப்பட்டு விட்டது. இவ்வாறு மனஇச்சை -களின் உலகம் உள்ளது. அதாவது, தன் சகோதரனின் உரிமைகளைப் பறித்துக் கொண்டும் தன்னுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் செய்யப்படுகின்றன.

இன்று எழுதக்கூடிய நூற்றுக்கணக்கான மக்கள் பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். சுயமே மற்ற முஸ்லிம்களும் இவ்வாறு எழுதுகிறார்கள்: இஸ்லாத்தின் பெயர் மட்டுமே எஞ்சி இருந்து விட்டது. அமல் இல்லை. ஆக, இதுதான் அந்தக் காலம் ஆகும். இதைப் பற்றித்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அந்தக் காலத்தில் என்னுடைய மஹ்தி மஸீஹ் தோன்றுவார்' என்று முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். எனவே, அவர் வந்தார். அல்லாஹ் அன்னாரை ஏற்றுக் கொண்ட அந்த நற்பேறு பெற்றவர்களில் நம்மை இணைத்தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வது மட்டுமே போதுமானதா? இல்லை! மாறாக, அடியாரின் தொடர்பைத் தன்னைப் படைத்த இறைவனுடன் இணைப்பதும், படைத்த இறைவன் மற்றும் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கான உரிமையை நிறைவேற்றுவதும் அன்னாரது வருகையின் ஒரு நோக்கமாக இருந்தது. இவ்வாறு இவ்விரு வகையான உரிமைகளை நிறைவேற்றுவதன் மூலமாக நாம் நம்மைப் படைத்த இறைவனின் திருப்தியைப் பெறக்கூடியவர்களாக ஆக முடியும். (ஏப்ரல் 28, 2006 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் இருந்து... ஆதாரம்: குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 4, பக்கம் 210)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "அவனுடைய அடியார்கள் மீது கருணை புரியுங்கள். அவர்கள் மீது நாவு அல்லது கை அல்லது வேறு எந்தத் திட்டத்தாலும் அநீதியிழைக்காதீர்கள். படைப்பினங் -களின் நன்மைக்காக முயற்சி செய்து கொண்டிருங்கள். உங்களுக்குக் கீழ் உள்ளவர் என்றாலும், நீங்கள் எவரிடமும் அகம்பாவமாக நடக்காதீர்கள். ஒருவர் ஏசினாலும் நீங்கள் எவரையும் ஏசாதீர்கள். ஏழை, எளியவர், நல்லெண்ணம் கொண்டவர் மற்றும் படைப்பினங்களுக்கு அனுதாபம் காட்டக் கூடியவர் ஆகி விடுங்கள். இதன் மூலம் நீங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவீர்கள்... பெரியவர்களாக இருந்து கொண்டு சிறியவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்களை அவமதிக்காதீர்கள். அறிஞர்களாக இருந்து கொண்டு அறியாதவர்களுக்கு அறிவுரை கூறுங்கள். சுயநலத்தால் அவர்களை இழிவுபடுத்தாதீர்கள். செல்வந்தராக இருந்து கொண்டு ஏழைகளுக்குத் தொண்டாற்றுங்கள். தன்னலத்தை முன்னிறுத்தி அவர்களிடம் அகம்பாவம் காட்டாதீர்கள். அழிவுக்கான வழிகளைக் கண்டு அஞ்சுங்கள். (கிஷ்தீ நூஹ் - ரூஹானி கஸாயின் தொகுதி 19, பக்கம் 11-12)

அஹ்மதிகளைக் கா:பிர்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் என்று கூறுவதற்கான முழக்கங்கள் இட்டு மகிழக்கூடிய கடிவாளம் அற்ற கூட்டங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கா:பிர்,



இறைமறுப்பாளர், தஜ்ஜால் ஆகிய பட்டங்களை வழங்கியவாறு மவ்லவிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் அரசியல் ஆற்றல்களும் உலக சக்திகளும் இந்த இறைவல்லமையை ஒருபோதும் ஒருபோதும் மாற்றிட முடியாது.

அதாவது, இந்தக் காலத்தின் துன்பங்கள் மற்றும் வேதனைகளை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய பணியை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கி வைத்துள்ளான். பெருமூச்சு விட்டு, அழுது, புலம்பி வரும் மனிதத்தின் காயங்களுக்கான மருந்து அன்னார் மற்றும் அன்னாரால் உருவாக்கப்பட்டுள்ள கிலா.்.பத்தின் ஆடையுடன் இணைக்கப்பட்டு விட்டது. இந்த ஆடையைப் பிடிக்காமல் மனித குலத்திற்கு அமைதிக்கான கனவு ஒரு மிரட்சியை விட அதிகம் ஒன்றும் இல்லை.

ஒருவர் காழ்ப்புணர்ச்சி எனும் கண்ணாடியை அவிழ்த்து விட்டு, ஸேர் ஸபர் எனும் விவாதங்களைத் தாண்டி, இந்தக் காலத்தின் எல்லா நிலைமைகள் மற்றும் நிகழ்வுகளை ஆய்வு செய்வார் என்றால், அவருக்கு கத்மே நுபுவ்வத் என்பதன் உண்மையான பொருளும் புரிந்து விடும். அதாவது, எவ்வாறு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம்முடைய தூய போதனைகளின் வரைபடத்தை முன்னவர்களின் காலகட்டத்தில் மட்டுமல்லாமல், அதற்கும் மேற்பட்டு, பின்னவர்களின் காலகட்டத்தில் பிறக்கக்கூடியவர்கள் மீது பதிந்து விட்டார்கள். கியாமத் வரை இதுதான் அந்த வரைபடமாகும். அது உலகத்தின் வெற்றி, நலன் மற்றும் மனிதம் எஞ்சியிருப்பதற்கான உத்தரவாதம் ஆகும்.

ஹா.்.பிஸ் ஷீராஸீ உடைய இந்தக் கவிதை வரி உண்மையான முறையில் ஒருவருக்குப் பொருந்தும் என்றால், அது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் புனித இயல்புக்குத்தான் பொருந்தும். அதாவது,

ثبت است بر جریده ء عالم دوام ما

(ஸப்த் அஸ்த் பர் ஜரீதயே ஆலம் தவாமே மா)

(உலக வரலாற்றின் பக்கங்களில் நம்முடைய எஞ்சியிருத்தலின் முத்திரை பதியப்பட்டு விட்டது) மேலும், அந்த முத்திரையை உலகின் எந்த ஆற்றலாலும் உடைக்க முடியாது.

எனவே, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு மனித குலத்தின் மீதிருந்த அன்பு மற்றும் அன்னாரின் அனுதாபத்திற்கான அசாதாரணமான உணர்வு அதே தூய இயல்பின் அடிச்சுவட்டின் ஒரு தோற்றமாகும். அந்த அருளுக்குரிய மாமனிதர் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் ஆவார்கள். ஹுஸுர் (அலை) அவர்களின் இயல்பில் நாம் கண்ட இந்த ஒளிகள் அனைத்தும் அதே ஒளிவீசும் சூரியனால் வழங்கப்பட்டதாகும். அன்னாரை அல்லாஹ் ஒளிவீசும் சூரியனாக ஆக்கி உலகின் நேர்வழிக்காக அனுப்பியிருந்தான். மேலும், ஹுஸுர் (அலை) அவர்கள் அந்த ஈமானையும், இஸ்லாத்தையும், திருக்குர்ஆனையும் சுரய்யாவிலிருந்து திரும்பக் கொண்டு வந்தார்கள். அது ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்களால் கொண்டு வரப்பட்ட இஸ்லாம் ஆகும்; ஈமான் ஆகும் மற்றும் திருக்குர்ஆன் ஆகும்.

எனவே, இன்று நாம் அனைவருமே ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயீல் (ரலி) அவர்களுடன் ஒரே குரலாகி அவர்கள் எடுத்துக் கூறிய அந்த சத்தியத்தை மீண்டும் எடுத்துக் கூறுவோம். அதில் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்! நான் அன்னாரை விடச் சிறந்த, அன்னாரை விட நல்லொழுக்கமிக்க, அன்னாரை விட நல்லவரான, அன்னாரை விடச் சான்றாண்மை -மிக்க, அன்னாரை விடப் பரிவுகாட்டக்கூடிய, அன்னாரை விட அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் மீதான அன்பில் நிலைத்திருக்கூடிய வேறு எந்த நபரையும் நான் காணவில்லை. அன்னார் ஓர் ஒளியாக இருந்தார்கள். அந்த ஒளி மனிதர்களுக்காக உலகில் வெளிப்பட்டது. ஒரு கருணை மழையாக இருந்தார்கள். அது ஈமானின் நீண்ட வறட்சிக்குப் பிறகு இந்த மண்ணில் பொழிந்தது. இதை பசுமையாக்கிச் சென்று விட்டது. (சீரத்துல் மஹ்தி தொகுதி 1, அறிவிப்பு எண் 975)

அல்லாஹ் நமக்கும் இந்த ஈமானிய மழையிலிருந்து பெரும் பங்கு வழங்குவானாக!

பெரியவர்களாக இருந்து கொண்டு சிறியவர்கள் மீது கருணை காட்டுங்கள்; அவர்களை அவமதிக்காதீர்கள். அறிஞர்களாக இருந்து கொண்டு அறியாதவர்களுக்கு அறிவுரை கூறுங்கள்; சுயநலத்தால் அவர்களை இழிவுபடுத்தாதீர்கள். செல்வந்தராக இருந்து கொண்டு ஏழைகளுக்குத் தொண்டாற்றுங்கள்; தன்னலத்தை முன்னிறுத்தி அவர்களிடம் அகம்பாவம் காட்டாதீர்கள். அழிவுக்கான வழிகளைக் கண்டு அஞ்சுங்கள்!

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam